உ
கணபதி துணை.

நித்திய கன்ம நெறி.

திருக்கைலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்
சிதம்பரநாத முனிவர்
இயற்றியருளியது.

இஃது

ஷை ஆதீனம் 23-வது குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்
ஆக்ஞைப்படி
ஷை ஆதீனம் அடியார் குழாத்தினர்களாகிய
வித்வான்
சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகளால்
பார்வையிடப்பட்டு
கார்பார்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளால்

மாயவரம்
ஆனந்த ஸாகர அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

பிரபவஹு ஆனிமீ
1927.

உ

குருபாதம்.

முகவுரை.

சிதம்பரநாத முனிவரென்பார் இற்றைக்குச் சற்றேறக்குறைய இருநூறு வருடங்களுக்குமுன் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்தில் பத்தாவது குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரியர் திருமுன்னர்த் திருவருட்செயலாற் ருமேயடைந்து வழிபட்டு பரமாசாரியருடைய கிருபாநோக்கிற்குப் பாத்திரராகி பரமாசாரியரிடத்திலும் அடியார்களிடத்திலும் முறுகிவளர்ந்த பத்தி விநயங்களையுடையவராய் இருந்து ஆதீனத்திலேயே தென்மொழி வடமொழிகளைக் கற்றுணர்ந்து அதிவல்லுனராய் ஆசிரியர்பாற் சமைய விசேட தீக்கைகளைப் பெற்று அவற்றிற்குரிய சரியை கிரியை யோகங்களாகிய நித்திய கன்மானுட்டானம், ஆலய தரிசன சிவபூசாதிகளை முறையே செய்துவருங்கால், அருள் வசத்தாய் இவருளமானது பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்குச் சைவசந்நியாசப் பெரும்புணையையே அவாவுவதாயிற்று. நிற்க.

சுத்தாத்வைத சைவசித்தாந்த பானுவாய் விளங்காநின்ற சிவஞான தேசிக பரமாசாரியர் சிவத்தலயாத்திரையாகச் சென்று பல தலங்களையும் தரிசித்துக் குருக்ஷேத்திரமாகிய திருவாரூரையடைந்து மூலட்டானேச்சுரரையும் தியாகராஜப் பெருமானையுந்தரிசித்து, அசபா நடேசர் பதிகம் அருளிச்செய்து தோத்திரித்துப் பின்னர் அடியார்கள் வேண்டுகோளுக்கிரங்கிக் கொலுவீற்றிருந்தருளுவாராயினர். அப்போது தமிழாகர முனிவர், பஞ்சாக்கர முனிவர் நிரம்ப வழகிய புலவர். கவிவீரராகவ முதலியாராதிய பலரும் பல பாக்களாற்றுதித்து வழிபட்டு நிற்க இச்சிதம்பரநாத முனிவரும் சிவஞான தேசிகர் பதிகம் என்னும் நூலையியற்றித் தோத்திரித்து அதில் 9-வது பாடலாக

மொழிவதுன் னாமங்கள் கேட்பதுன் கீர்த்திகள்
முடிமிசையி லணிவதுன்றான்
முண்டகப் போதுமப் போதுங் குடிப்பதுன்
முண்டகத் தாள்விளக்கிப்
பொழியுநீர் மெய்யினிற் பூசுவதுன் னீற்றினைப்
பூண்பதுன் னக்கமாலை

புசிப்பதுன் பரிகலச் சேடநீர் மலர்கொண்டு
பூசிப்ப துன்னடியிணை
விழிகொண்டு காண்பதுன் வடிவுவலம் வருவதுன்
மிளிர்தருமை மதுரையாரூர்
மேவும் பெருந்திரு மடத்தையுன் னடியனேன்
விரித்து டுப்பதுமாத்திரம்
செழுமை யில்லாதபிறர் கலைசிறப் பல்லவுன்
செங்கலைக ளாகவைப்பாய்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிகசம் பந்தகுருவே

எனத் தமது எண்ணத்தை விண்ணப்பித்து பரமா சாரியர் அனுக்கிரகத்தினால் அடியார் குழாங்களிலொ ருவராகிய * சங்கரகுமார முனிவரிடத்தில் சைவசந்நி யாசத்துக்குரிய யாத்திரை காஷாயம் பெற்று, பின் ஞானசாரியார்பால் சமைய விசேட தீக்கைகளும் சிவ பூஜை, மந்திர காஷாயமும் பெற்று பின்னர் ஞான சாரியரால் இருவினையொப்பு, மலபரிபாகம் உடைய

* சங்கரகுமார முனிவர் தருமபுரம் ஸ்தலபுராணமும் சச்சி தானந்த விநாயகர் பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களும் இயற்றியருளினர்.

ராய்ச் சோதிக்கப்பட்டு சத்திபதித்து தீட்சைச்குறை ஞானதீக்கை, ஞானோபதேசமும் அருளப்பெற்று சிவ ஞானங்கைவந்தவராய்த் தருமையம்பதியிலே அடியார்களோடு ஆசாரிய தரிசன பராயணராய் வசித்துவரு நாளில் திருக்கடவூர் பஞ்சாக்கர முனிவர் கேட்டுக் கொண்டபடி வடமொழி யாகமங்களையும், பத்ததிகளையும் ஆராய்ந்து நித்தியகன்மவிதியைத் தமிழில் குறட்பாவால் நித்திய கன்ம நெறி யென்னும் பெயருடன் அருளிச்செய்தார்.

இந்நூல் பெரும்பான்மையும் கடுஞ்சொற்பிரயோக மில்லாதமையப் பெற்றிருக்கிறது.

தியானவிதிமுதல் போசனவிதி யீறாக 9 பகுப்புடையது.

செபவிதியில் அனுட்டானம், பூசையில் உண்டாகும் வழுக்களுக்குச் செபரூபமான பிராயச்சித்தமும் நன்றாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்நூலை சமயவிசேட தீக்கைபெற்ற பின்னர் ஆசிரியர்பால் முறையே ஓதி உணரவேண்டும்.

தீக்கைபெறாதவர்கள் இந்நூலை யோதுதற்கும், ஓதுவித்தற்கும் உரியராகார்.

தரு. ஞா. சட்டைநாதத் தம்பிரான்

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௰௩	௰௨	தீக்கதர்	தீக்கிதர்
௰௭	௰௮	துமவிடத்	தும்விடத்
௰௯	௰௧	செுய்தே	செய்தே
௨௧	௰௬	குண்ட	குட்ட
௨௩	௮	யாய்ச்	யாச்
௨௪	௰௧	ஒரு	ஒரு
,,	௰௭	ஓண்	ஒண்
௨௫	௰௮	வலகைகை	வலக்கை
௨௬	௫	சுங்கிதை	சங்கிதை
௨௮	௨	டைந்ன	டைந்து
௨௯	௰௫	செப்பிமு	செப்பிமு
௩௰	௰௯	மாச்சி	மர்ச்சி
௫௨	௩	மூதத்தா	மூலத்தா
௫௮	௮	முலமனு	மூலமனு

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௬௰	௰௩	அரன்மூ	அரனதுமூ
௬௩	௨௰	தஇய	இதய
௬௬	௫	ரைக்குநா	ரைந்நா
௭௧	௰௭	வார்ச்சனை	வர்ச்சனை
,,	௰௯	லைஞ்ஞு	லைஞ்ஞா
௭௨	௭	அஞ்ஞு	அஞ்ஞா
,,	௮	ரைஞ்ஞு	ரைஞ்ஞா
௭௬	௬	யொத்தான்	யொத்தவன்
,,	௰௩	காலபிமந்	கால்மந்

நித்தியகன்மநெறிக்குப் பழைய வுரையொன்றிருக்கிறது. அஃது ஆராய்ச்சிசெய்து பின்னரச்சிடப்படும்.

உ

கணபதி துணை.

சிவமயம்.

நித்தியகன்ம நெறி.

காப்பு.

அத்தனரு ளாகமத்தி னாய்ந் தவாவினிற்செய்
நித்திய கன்ம நெறிதனக்கு—முத்திதரும்
அன்னத்தா னத்தான் பரவைமுகத் தானருளுங்
கன்னத்தா னத்தானே காப்பு.

நூல்

தியானம்.

சீர்தங்கு செங்கதிர்கீழ்த் திக்கெழுமுன் னர்க்கடிகை
யோரைந் தெனவெழுந்தே யோர்ந்து ... க

சுசியெனினு மன்றெனினுங் கூடியமெய்ச் சுத்தி
யிசைவாகச் செய்துநீ யிட்டு ... ௨
என்சமைமயி ருத்திரனை நெஞ்சிற் சதாசிவனை
யென்கிரியை யானுமாங் கே ... ௩
யோகிவிந்து நாதம் புருவநடு வுன்ஞானி
சோகம்பா வித்திடுக தோய்ந்து ... ௪
இன்ன லறவியன்ற வாறுசெபித்தேமூலம்
மன்னுமரன் றாளிணையும் வாழ்த்து ... ௫
பூதி யணிந்தே புறத்திற் புறப்படுக
பூதியணி யாதொழிந்த போது ... ௬
அற்றைக் குபவசியா யானைந் தினையருந்த
லுற்றே யிருநா ளுரை ... ௭
உன்னுன் பிராம்ய முகூர்த்தத் திருகுணித
முன்னுணர்வோ னற்குணித முன் ௮

தியானம் முற்றிற்று.

அவசிய கருமம்.

மணலுவர் மண்ணீர்க்குண் மண்வேர்மண் புற்றோ
டெலுசுவர்மண் சுக்கா னிழித்து ... ௧

கார்கால மல்லாத காலம் புனிததலக்
தேராரு யத்திரஞ் சொல்லி ... ௰
எட்டுவிரற் கீழாமண் வெட்டியித யத்தெடுத்துக்
கொட்டிச் சுசித்தலத்திற் குள் ... ௰௧
வைத்திடுமண் ணான்கு திங்கட்காமந்த மண்ணொடுதண்
டத்தத்திற் கொண்டுகா கம் ... ௰௨
மிக்கதந்த காட்டாதி கொண்டூர்க்கீ சானவியன்
றிக்கொழித்து நேர்படுதிக் கில் ... ௰௩
ஆலயத்திற் கப்பாற் சுததண் டளவகன்று
சேலையான் மூடிச் சிரம் ௰௪
விளைநில மாறுகுளம் வீதிமடங் கோயில்
களர்கற்புற் றப்பின் கரை ... ௰௫
வழிமரநீ ழல்பசுமந் தையறுகம் பூமி
குழிமேடு காவருகிற் குள் ... ௰௬
அசுத்த நிலஞ்செங் தடுத்தநில மீமத்
தசுத்த மலாதிகளைங் கால் ... ௰௭
சுறுவசங்கா ரத்தளவுந் தாழ்ந்தநர கத்தி
லுறுவரத ணான்மோன முற்று ... ௰௮
அலாதபுவிப் பூத விகாரமற்று மாந்த
ரிலாதவிடத் திற்றிரண மிட்டு ... ௰௯

அகலவங்கன் மேவுமம ராகியரை வேண்டிப்
பகல்வடக்குத் தெற்கிரவும் பார் ... ௨௰

ஆசைதவர் கோப்பருகி யாண்குறிகட் டப்பாரேல்
நாசி நுனிதனையே நாடு ... ௨௧

உமிழாது வாய்நீர் மலம்விடுத்தோ மத்திற்
கமையாக்கொம் போடுமண்பிண் டம் ... ௨௨

மாணிலெருச் செங்கலால் வாய்த்தகுத நீவிலிங்கம்
பேணியிடக் கையாற் பிடித்து ௨௩

தீர்த்தமலா நீர்க்கோட்டி னிற்சென்றோர் தெங்கின்காய்
மாத்திரமண் வைத்து வலம் ... ௨௪

ஒருசாணீர்க் கிப்பா லிருந்துகுப்பத் தோர்கான்
மருவுகுதத் தோரைங்கான் மண் ... ௨௫

இடையிடையி லோர்கா லிடக்கை யினுக்கு
முடிவிலதற் கீரைம் முறை ... ௨௬

இருகாமுஞ் சேர்த்தெழுகாற் பெய்து கழுவி
விரவுபிருட் டஞ்சுசிசெய் மேல் ... ௨௭

தூய்மையுறு தாயினுறச் செய்கமுனஞ் சொல்லியமண்
ணுமலக மட்டென் றறி ... ௨௮

முழங்கான் முழங்கை முடிவொருகாற் பூசிச்
செழும்புனலி னாற்சுத்தி செய் ... ௨௯

இதுவில்லார்க் காகுமுறை யேயிருமை மும்மை
சதுர்மடங்கா மூவருக்குந் தான் ... ௧௰
மற்றோர் துறையுற்று வாய்நயன நாசிசெவி
யுற்றகரங் காலி னுகிர் ௧௧
சுத்திசெய்நீ ரெண்கா விடத்துமிழ்ந்து தோயத்துள்
வைத்திடக்கா றன்னை மகிழ்ந்து ... ௧௨
நகைபராக் குத்தலைக்கட் டின்றிநவில் சானு
வுகளத்துட் கைக ளூற ... ௧௩
உத்தர நோக்கி யுறைந்துகுக்கு டாசனமாய்
முத்தோ தகநுரைமொக் குள் ... ௧௪
தோற்றுபுழு நீருவர்நீர் தூய்மையுறு நீராதி
மாற்றி வெந்நீ ராதியையு மாற்று ... ௧௫
இன்றியமை யாததுசெய் தாலியைந்த தோடுமுந்
தொன்றமிழ்ந்து நன்னீ ருவந்து ௧௬
கோகன்ன முத்திரையாற் கூர்பிரம தீர்த்தத்தா
லாகுமனு விட்டா சமி ... ௧௭
தவற தறுமான்ம தத்துவமுன் மூன்றுஞ்
சுவதாந்த மாகச் சொலி ... ௧௮
அடைவேமுத் தத்துவத்து மாசமித் தோர்கா
விடையிடையிற் கைகழுவி யே ... ௧௯

அங்குட்ட மூலத் தகரத்தை யத்திரத்தாற்
றங்கத் துடைத்திருகாற் றூன் ... சம
அத்த தலத்தா லதோமுகமா யத்திரத்தால்
வித்தகமாய் வாயைநீ வி ... சக
வத்திர நாசிகன்கா துந்தியித யம்வாகு
வொத்தசிரம் பன்னிரண்டி னும் ... சஉ
அங்குட்டஞ் சேர்ந்த வனுமிகையி னுற்றெடுநீர்
தங்கவல முன்னிதயத் தால் ... சங
எடுக்குநீ ரேல்வடித்துப் பூமியில்வைத் தென்று
மிடக்கையாற் சாய்த்தாச மி ... சச
விதியா முழுந்தமிழ்ந்து நீரே விசிட்ட
மதிகரு னஞ்சுரைக்கொப் பாம் .... சரு
பார்கர ஞதியரை நீர்மலம்போக் கும்பகத்தி
னேர்க்கினனேற் கூறுக நூறு ... சகூ
கொட்டாவி தும்ம லுமிழ்தலெழு வாய்குயிற்றிற்
கட்டநீர் மோசிக்குங் கால் ... சஎ
பையவோங் காரமிரு பத்தோ ருருச்செபித்துச்
செய்கமுக்கா லாயாமந் தேர்ந்து ... சஅ
அரன்முற்ற மாராமத் தின்மலநீர் நீக்கிற்
பிரமஞ் சதம்பசித்துப் பேசு ... சகூ

பலைநீ ருவருழுக மண்ணைதிதீ ரத்துச்
சலமலநீக் கிற்சொல் சதம் ௫௰
ஆறோர் மரக்கடிநாற் சந்தியதி லாகிவிரு
நூறறிந்தோர் கூறுகமுந் நூறு ... ௫௧
மலாதிகளை யந்தமே தேனுமருந் தந்தஞ்
சலாதியரு கந்தந் தனில் ௫௨
ஆசமியா ரன்றுபசி யோடா யிரமறைக
வாசகலக் கொண்டுகவ்வி யம் ... ௫௩

அவசிய கருமம் முற்றிற்று.

தந்தசுத்தி.

ஆலரசு நெல்லிவிர லாவிரைசெங் கற்சாம்பர்
பான்மரங்கள் பட்ட மரம் ௫௪
உறுமணலே ரண்ட முருங்கைபலா சோடு
நறுவிலிநீர் வஞ்சி நமை ... ௫௫
வெளிற்றுமரம் வேதாளப் பேர்மரம்வை வேம்பு
புளிக்கொம்பிற் சுத்திதவம் போம் ... ௫௬
மருதுகுமிழ் புன்குநொச்சி வாகைகருங் காலி
விரவாயில் கண்கோணை விட்டு ... ௫௭

பச்சைதோ லோடிருநான் கங்குலநீ ளம்பருமை
வைச்ச கனிட்டையள வாம் ... ருஅ
கொம்புதாக் கொண்டதனிற் கூறிதய மந்திரித்தே
யிம்பர்வடக் குப்பார்த் திருந்து .... ருகூ
நாய்நீச ரென்பசங்கட் டம்பூத்த நாரிகரு
மாநோக்கா மன்மோன மாய் ... கூய
துறவியெந்த நாளும்பற் சுத்தி வலமா
யுறவியற்றி யேபுறம்புள் ளும் ... கூக
நாவை வழித்திடப்பாற் போட்டுமுந் நான்குதாஞ்
சிவனம்வா மத்துமிழ்தல் செய் .... கூஉ
எரிநிரயத் தெய்துவர்மோ கத்தினு லேனும்
அரியவலப் பாலினுமிழ்ந் தால் ... கூங
ஓடருத வங்கொம்பின் றேற்சருகாம் பற்சுத்தி
நீடுகதி ருற்றபின்பண் ணேல் ... கூச
பண்ணிற் பராமுகமா மந்திரங்க டாம்வெறுப்பர்
விண்ணோர் முதலோர் மிக ... கூரு
கிரகிமா வாத்திவிளாக் கீசகம் பூலா
மருதுசம்பு நீப மகிழ் .... கூகூ
சங்கிறலி நாயுருவி பிண்டிசண்ப கங்குருகா
மங்குலமுந் நான்குநீ ளம் .... கூஎ

ஆமுன் விதிப்படிகீழ்த் திக்குப்பார்த் தேமாசு
போமளவுஞ் சுத்தி புரி ௬அ
முற்றிதி யாறென்பா னேம்மூன்று திங்களின்மு
னுற்றவுப ராகத்தி னும் ௬௯
விதிபாத மாதியினு மேவில்லோன் செய்க
வுதிர்சருகாற் சுத்தி யுற எ0
சருகுமின்றேற் பன்னிருகாற் றண்ணீ ருமிழ்க
வொருவர்க்கன் றீதெல்லார்க் கும் ... ... எக
விதியாநா ளிற்பல் விளக்கிற் குலமே
முதிகநர கத்திலுறு மால். ... ... எஉ

தந்தசுத்தி முற்றிற்று.

ஸ்நானம்.

நீராடல் பூசை நியதி புசிப்போம
மீராடை யோடே யியற்று எ௩
ஓமத்தி லர்ச்சனையி லுன்னுதியா னஞ்செபத்திற்
றீமையறு நானத்தி னில் .... எச
மலசல நீக்கிற் புசிக்கின் மவுனம்
விலகா தறிவுமிகுந் தார் .... எரு

வாருணம் பூதி மனுமா னதநான
மீரிரண்டு நானநித்தி யம் ௭௬
வாயவியங் கௌரவம் பார்த்திவந் திவ்விய
மாயிலென்று நைமித்தி யம் ௭௭
கிணறகழி வாவிபொய்கை சேடில்கங்கை யாதி
புணரி புகுஞ்சங்க மம் ௭௮
சோமனணிந் தான்கோயிற் பாங்காருந் தோயமிவை
யாமொன்றுக் கொன்றுவிசே டம் ... ௭௯
ஆசமனஞ் செய்துசக ளீகரணஞ் செய்தறல்மண்
வீசியைம்பின் டங்கரையின் மேல் ... ௮௰
தெளித்தவிதி மண்கவசத் தான்மூக்கூ ருக்கி
யரைக்கிழொன் றுற்புனித மாக்கு ... ௮௧
பின்னுமொரு கூற்றைநா பிக்குமே லத்திரத்தைப்
பன்னியெங்கும் பூசிப் பரித்து ... ௮௨
நன்கன்னந் தண்டமிவை யைக்கரத்தி னுன்மூடிச்
சண்முகி முத்திரையாற் றுன் ... ௮௩
உத்தரந்தான் பூருவந்தா னேர்கியுந்தி மட்டறவி
னத்திரத்தை யுன்னிநீ ராடு ௮௪
நற்சிரமீ தத்திரத்தி னுற்புரோக் கித்துமுக்கா
லற்கியமீந் தேகிலசெப் பாய்ந்து ... ௮௫

ஒழிந்தமஃ்ஙே வைத்திடக்கை சங்கிதையோ திக்கா
ரிழிந்துகுணக் குத்தரந் தெற்கில் ... ௮௬
மூன்றுக்கி யொவ்வொருக்கா லத்திரத்தான் மூலத்தா
லான்றபஞ் சப்பிரமத் தால் ௮௭
மொழிந்தமுறை முன்மந் திரித்துக்கீழ்க் கூறு
சொழிந்ததச திக்கினும்போ டோர்ந்து ௮௮
வடகூற்றை நீரிற் கரைத்துவளர் மூலத்
தடையச் சிவதீர்த்த மாக்கு ௮௯
தென்கூ றுடற்பூசிச் சம்புவைச்சிந் திக்கறற்றோய்ந்
தன்விதுவென் றாழ்க்கரங்களால் ... ௯௰
சத்தாம் வவுஷடந்தஞ் சங்கிதைகொண் டேகும்ப
முத்திரையா னீர்பன் முறை ௯௧
சென்னி மிசையபிடே கித்தத்தி ரத்தினு
லெண்விதிக்கிற் றிக்கிலிறைத் தே ... ௯௨
நெல்விமுத லாலாடி நீடிருந்தீர்த் தம்மொடுக்க
லல்குபிரா சாதத்தா லாம் ௯௩
ஈர முலர்ந்ததுகி லான்மாற்றல் செய்கவிது
வாருண நான மதி ௯௪
ஈரத்துகிலுடுத்துச் செய்கன்ம நிட்பலமே
வாரியின்மூழ் கிற்சுசியா வார் ... ௯௫

காய்ந்ததோர் கோவணங்கைக் கொண்டு தரித்திடுக
காய்ந்தகலிங் கத்திணையு மே ௬௬
நிதம்ப வரையளவே நீள்கோ வணந்தான்
சிதம்பெறுநா ணம்பதிழை தேறு ... ௬௭
அந்நான்முக் கூற்றி லொருகூற் றளவுநாண்
முன்னிடத்திற் றொங்க முடிந்து ... ௬௮
வாமத்தி னாபி யைவலமா யேதரிநன்
காமென் கடிசூத் திரம் ௬௯
உந்திக்கு மேல்கீழ்த் தரித்தால்வா ணாளுலக்கு
முந்துதவ நாசமா கும் ௭௰
இல்லத்தேன்முன் போன்மிருத் திகைநானஞ்செய்தே
மல்குபுனலை வடித்து ௭௧
உரியவஞ்செட் டொன்பதுகும் பத்துறு நீரி
லான்மூல மந்திரித்தே யாடு ௭௨
மூழ்க வசத்தர் களமளவோ மொய்த்தகடி
தாழும் பதத்தளவு தான் ௭௩
நீரிற் கழுவிக் கழுவாம னின்றவங்க
மீரத்தா சாற்றுடைத்திட் டே ... ௭௪
உம்படந்த வத்திரத்தா லொள்வலக்கா லங்குட்ட
வங்கியினான் மெய்மா சடர்த்து ... ௭௫

சத்தி யமுத சலக்கா லுடனனைக்கச்
சுத்தியதா மென்றே துனி ௱௬
விழுவி னமரின் மகமனைத்தின் மேலூர்
கழுலுற்று வெங்கா றனில் ௱௭
தீர்த்தங் கலகம்வழிச் செல்லை யிடர்தேவ
யாத்திரையிற் றீட்ட திலே ௱௮
சண்டாளர் பாணா ரிரசகரென் போர்தமக்குத்
தண்டிரண்டா கும்விலக ரூன் ... ௱௯
சார்ங்கமக வின்று டனக்கொன் றரைத்தண்டா
சூர்ந்த விருதுமதிக் கொன்று ... ... ௱௰
ஒட்டகநாய் சோழி புறுச்சுடுகா டேர்ப்பன்றி
குட்ட ரதீக்கதர்கள் கொக்கு ௱௰௧
உலகிற்கன் மாராறுவர்க் குந்துகமொன் றுகும்
விலகல் விலகா விடில் ௱௰௨
குரவ னரன்றிரவி யங்கெடுப்போர் கொள்வோர்
கரமாகு சத்தார் கழுகு ௱௰௩
கூகை மறுசமயி யென்பொடு கோபிதுட்டர்
காக நரிதடிகங் கம் ௱௰௪
நின்மா லியம்புசிப்போ னீடுறுப்பி னன்பதிதன்
கன்மகி னன்னுத்தி கன் ௱௰௫

முன்னலமீ ரெண்கடிகை யாடியப னத்துமொழி
பின்னலந்தைக் கிரெட்டாப் பேசு ... ௱௨௬
இருவிடு வுக்குமுன்பி னெவ்வெட்டாங் கன்னல்
கருதுகவிக் காலங் களில் ௱௨௭
பாம்பு பருதிபற்றுங் காலை மதிவிடுங்கா
லாம்புனிய கால மதில் ௱௨௮
இருநான்கி ரேழு விதிபாத மெய்துந்
திருவாரு நல்லதினத் தில் ௱௨௯
குன்றுநான் மாதத்திற் கூர்நாணற் பஞ்சதசி
யென்ற விவைக ளினில் ௱௩௰
இருகுணிதஞ் செப்க செபம்பூசை யாதி
கருதுமிவை நித்தியாங் கம் ௱௩௧
இருநிசிபி லட்டமியே லேற்றங்கொ ணோராய்
வரின்முந் தினதே வரம் ௱௩௨
மயிர்நெல்லி யாற்சுத்தி வாய்கொம்பாற் றுண்ட
நயனஞ் செவிநீரி னல் ௱௩௩
மற்றுளவங் கம்புனலான் மண்ணாலு மாஞ்சுத்தி
யுற்றவிவை நித்தியமா கும் ௱௩௪
சுத்தி கழுவச் சிலையினொடு தூபமணி
முத்துப் பிரவாள மும் ௱௩௫

ஆம்புனிதங் காதுக்க ளாம்பாத் திரமனைத்துஞ்
சாம்பராற் றூன்புளியாற் றூன் ... ௱௩௬
அருவருப்புண் டேற்கோ சலத்தால்வெண் ணீரா
லரியபொன் வெள்ளிசுத்தி யாம் ... ௱௩௭
கருஞ்சுசிசாம் பர்புளிகஞ் சத்தாம் பிரத்திற்
கிரும்புரைத்துக் காய்ச்சிடச்சுத் தி ... ௱௩௮
கழறியவன் றிச்சருவ காதுக் களையு
மழலிடைக்காய்ச் சச்சுத்தி யாம் ... ௱௩௯
ஓட்டைகர நாய்மோந்த லோகம் விடுகவெச்சிற்
பட்டவெமப் பாத்திரந்தா னும் ... ௱௪௰
கயமருப் பிப்பிசங் கந்தர ளங்கோ
மயநீரி னூற்புனித மாம் ௱௪௧
தின்மரம்வெண் ணீரதனாற் சுத்திநிந்தை சேர்ந்தக்கால்
மண்ணீரி னூற்புனித மாம் ௱௪௨
வருணமத னூற்கழுவ லாகும் புனிதஞ்
சருமம்பா சந்தழையா தி ௱௪௩
வெய்யிற்பு ரோக்கணத்தாற் சுத்திவியன் பட்டாடை
செய்யதுகிற் கம்பளா தி ௱௪௪
சிதக்கடுகி னூற்கவுசி கஞ்சுசிப ரிட்ட
மதிற்குத மாதிசுசி யாம் ௱௪௫

திரணமிலை யால்வேயாற் செய்தவைக்குச் சுத்தி
திரமுறவா டைச்சுசிபோற் செய் ... ௱௪௬
சுசிநெற் கழுவ மலாதிபடிற் சோரா
சுசியுவர்மண் காரத்தாற் றூசு ... ௱௪௭
அடுத்தமிகு தண்டுலத்திற் பட்டால விட
மெடுத்தகற்றச் சுத்தியுறு மே ... ௱௪௮
விரவினெனின் மாலியம்பு ரோக்கிசுசி மேவு
மரிசிமுத லாயி னகற்று ௱௪௯
தரித்திடுகர்ப் பூராதி தாவிறயி லாதி
பருக்கியபீ ராற்புனித மாம் ௱௫௰
துப்பிக்கின் சாறுதேன் காய்ச்சிவடிக் கச்சுசியுப்
பட்பொடுகாய்ச் சச்சுத் தியாம் ... ௱௫௧
பயமதுகாய்ச் சச்சுத்தி யாங்கடையின் பண்டந்
தயிர்சுசிநி ரீக்கணத் தால் ... ௱௫௨
தோயத்தில் வார்த்தெடுக்கச் சுத்தியெச்சி லாந்தயிலந்
தோயம் வடிக்கச் சுசி ௱௫௩
கூபத் தசுசியறு நாறுகுட நீரிறைத்தே
தாபித்தா னைந்துமவிடத் தான் ... ௱௫௪
சத்தியத்தால் வாக்குச் சுசியசத்தி யஞ்சாற்றிற்
சுத்திவா மஞ்சதஞ்சொல் லில் ... ௱௫௫

ளவிருகிலம் பூசைகிளி யெயச மாத
ரலிகொடினீற் றுனை மாம் ... ௱௫௬
நீருணாஞான் பிச்சைதாயின் மூன்றின் முன் பின்சந்தி
னீராதி நீக்கலணி நீறு ௱௫௭

ஸ்நானம் முற்றிற்று.

அனுட்டானம்.

இருந்துவடக் குப்பார்த் திரைகுருவை யெண்ணிப்
பொருந்திமோ னம்பூதி பூசு ... ௱௫௮
ஆசான்றெய் வம்வித்தை யங்கிபொல்லாப் பூமியெதிர்
நீசர்முன் னாற்றுமிடே னீறு ... ௱௫௯
நீறணிந்தா லோர்விரலோர்கையா னிலப்பார்த்துக்
கூறு ரவுரவமா கும் ௱௬௰
நணுகுவர் மாநரகி னனிலத்தி னீற்றை
பணுவளவே னும்வீழ்த்தி னூர் ... ௱௬௧
பன்னிசெம்பு நீறு படங்கமண்ட லஞ்சபனந்
தன்னுடைய வாகுந் தனக்கு ... ௱௬௨
சாதனம் பூதியன்றிக் தானங் கொடுப்பினுமற்
றேதுசெய்தா லும்பலமின் றே ... ௱௬௩

உன்னுமுக்தி புத்தி யுறுவருக்க சம்பூர்வ
மென்னுந் திரைபார்த் திருந்து ... ௱கூச
அனுமிகாங் குட்டநடு மூலமான் கன்ன
லெனுதறநி ரீக்கணஞ்செய் தே ... ௱கூரு
உரைத்தக் திரத்தைப் பதாகையத னுலான்
புரோக்கணந் தன்னைப் புரிந்து ... ௱கூகூ
பாடியே யும்படந்த வத்திரத்தைப் பண்ணிடுக
தாடனந் தர்ச்சனிதன் னுல் ... ௱கூஎ
அப்பியுக்க ணந்தாழ் பதாகை வவுஷடந்தஞ்
செப்புகவ சத்திறைற் செய் ... ௱கூஅ
ஆசமித்துக் கைநீ றதனைநாற் சுத்திசெய்தே
யாசகல்கற் பாதியா னுல் ... ௱கூகூ
சங்கிதையைச் சாற்றகற்ப மென்னிற் கலையைந்துஞ்
சங்கிதா மந்திரமுஞ் சாற்று ... ௱எய
அத்திரபீ சத்துமுடி யாதிதா ளீறுவலத்
தத்தங் கொடுதொடுநீற் றுல் ... ௱எக
அங்குட்டஞ் சேர்மத் திமைநீரி னுற்குழைநீ
றங்குலிநீர் மற்றையதா காது ... ௱எஉ
ஒவிலீ சானதி யைந்தாலு மூச்சிநெற்றி
காவிலுர முந்திமுழந் தாள் ... ௱எங

கைத்துணைகண் டம்முதுகு காதுசத்தி யோசாத
மந்திரங்கைக் குச்சுத்தி யாய் ... ௱௭௪
இடையிடையி லெண்ணிநெற்றி மார்தோட் கிருமுன்
றடையவிரன் மற்றவைக்கொ ன்றாய் ... ௱௭௫
திரிபுண் டரங்கரித்தி ரெட்டிடத்தச் சேடம்
பிரமமு லத்து முடிப்பெய்து ... ௱௭௬
சிந்தும் விபூதிகா ளத்திரயஞ் செய்திதயம்
வந்ததாப் பாளியறி வால் ௱௭௭
அதிகதிரி புண்டரமே லாயுவழியு
மதிகதவம் போங்குன்றி னால் ... ௱௭௮
இதுபூதி நான மிறையா கமத்தின்
விதியறிந்த வாறுசொல்வா மேல் ... ௱௭௯
ஆசமித்து மூலநா தாங்கமறைந் தோங்குவிந்துத்
தேசமுதா லங்கநிறைத் தே ... ௱௮௰
பண்ணியிங்ஙன் மானதநா னம்படாந் தந்திரத்தா
லென்றுமிடக் கையிருகா லும் ... ௱௮௧
வலக்கரத்தை வாமகரந் தன்னாலோர் காலுந்
துலக்கமுற மேல்கீழ் துடைத்து ... ௱௮௨
வாட்டமில் லாவவுஷ டந்தசுத்தி மந்திரத்தாற்
கூட்டிக் கரங்கள் குறித்து ௱௮௩

மொழியுஞ் சிவாதன மூர்த்தியிலங் கைக்கு
ளழுகுறங்குட் டங்க ளமைத்து ... ௱௮௪
தர்ச்சனியா லங்குட்ட மங்குட்டத் தாலந்தத்
தர்ச்சனி யாதி தனை ௱௮௫
வில்லாரு மீசான மாதிமனு வைந்துமெள்ளச்
சொல்லியே பையத் தொடு ... ௱௮௬
அத்தநடு வுள்ளுகள வங்குட்டத் தானிசிக்க
வித்திபா தேகம் விபந்து ௱௮௭
சேர்த்துமத்தி மாங்குலிமூன் றும்வளைத்து மந்தஞ்சேர்
நேத்திரங் கைக்கு ணிசித்து ... ௱௮௮
அங்குட்ட மோரிரண்டு மங்கையினுக் குள்வளைத்துத்
தங்கநிசி மூலமனுத் தான் ௱௮௯
இதயாதி நான்மனுவிற் றின்னமசு வாகா
வதிகவஷட் டோடுவௌஷட் டாம் ... ௱௯௰
அவ்வித யாதிகனிட் டாதிதர்ச்ச னுந்தத்திற்
செவ்விரண்டங் குஸ்டத்தாற் சேர்த்து ... ௱௯௧
சொற்றபடங் தத்திரத்தி னற்றுலங்கங் குட்டத்திற்
றற்சனிக ளானிசிக்க தான் ௱௯௨
வவுஷடந்த மாங்நவசத் தாற்கைசுற்றிக் கூட்டு
வவுஷடந்த மூலமனு வால் ௱௯௩

செங்கை நியாக மிருதிகழுங் குட்டமுடன்
றங்கு மனாமிகையாற் றான் ௱௯௪
திரார் சிவாதனக்காற் சேர்ந்தசிவ மூர்த்தியினா
லேரிதயன் தன்னினிசித் தே ... ௱௯௫
பேறுறுகை முட்டி பிடித்தவங் குட்டஞ்சேர்
கூறுதர்ச்ச னாதிகளைக் கொண்டு ... ௱௯௬
சிரமாதி சானுவந்தஞ் செப்பு முறையே
திரவிசா னாதியைந்துஞ் சேர் ... ௱௯௭
வெறிலங்குட் டஞ்சே ரனாமிகையும் வீறாகக்
கூறுநடு மூவிரலுங் கொண்டு ... ௱௯௮
நிகழ்விக்கி யாதேகக நேத்திரத்தை நிங்கை
யகலிதயங் கண்ணி லமைத்து ... ௱௯௯
கூடு மனாமிகையங் குட்டங் கொடுமூல
நிடுமிதய யத்து நிசி ௨௱
எரிதய முன்மூன்றம் மூவிடத்தி லங்குட்டஞ்
சேர்கனிட்டை முன்மூன்றாற் சேர் ... ௨௱௧
தற்சனிக ளாற்களத்தைச் சுற்றித் தனநடுவிற்
றிற்கவச மெண்ணிநிசித் தே ... ௨௱௨
வலமுன் னனாமிகைக ளான்மன்னு ணைக்கு
ளிலகத் திரத்தைநிசித் தே ௨௱௩

அக்ககலங் கொண்டுதா ளத்திரய மும்பாடந்த
லத்திரத்தாற் செய்திடுக வாய்ந்து ... ௨௱௪
சித்திர மாகச்செய் சோடிகையா லும்படந்த
வத்திரத்தாற் றிக்குபந்த னம் ௨௱௫
வந்தவவ குண்டனமா முத்திரையைச் செய்வவுஷ
டந்த கவசமூலத் தால் ௨௱௬
அடியாதி சென்னிபந்த மத்தங் களினுற்
றெடுதன்மா முத்திரையாய்ச் சொல் ... ௨௱௭
அங்க நியாத மிருமார்ச் சனமதனைப்
புங்கமுறச் சொல்வாமிப் போது ௨௱௮
தனையாருஞ் சங்கிதா மந்திரத்தைச் சாற்றிப்
பகர்பிரா ணாயாமம் பண் ௨௱௯
விந்தமுத மேவங் குசமுத் திரைவவுஷ
டந்தவித யத்தாற்கொண் டாய்ந்து ... ௨௱௰
அப்புவில்வைத் தேமூலத் தாக்கிச் சிவதீர்த்தந்
திக்குபந்த னதிகள்செய் தே ... ௨௧௧
நாலுமுக மெண்க ணவில்செபஞ்சி ருக்குவல
மேலுகர கந்தன் றிடம் ௨௧௨
முந்நூல்செவ் வாடைதனுப் பூண்முதி ராவிளமை
பன்னமேற்பத்மா சனம் ௨௧௩

உடையவளாய்ச் சாத்துவித முற்றவ ளாகிச்
சடையார் பிராமி தனை ௨௧௪
காலையில்வானத் துடுவிளங்குங் காவிதயப்
பாலிற் பளிக பரிந்து ௨௧௫
கருணைமிரு கண்ணோர் முகமபபங் கண்டோர்
வருவலஞ்சங் காழிவா மம் ௨௧௬
வெண்ணிறந் தூசு துழாய் முந்நான்மின் பூண்கலுழன்
றன்மேற் பதுமா சனம் ௨௧௭
சேர்ந்த விராசத மார்திருவை யுச்சிப்போ
தோர்ந்து புருவநடு வன் ௨௧௮
ஒருமுகமுக் கண்வலப்பா லுற்றசெபஞ் சூல
மருவபயஞ் சக்திவா மம் ௨௧௯
பிதிரழகு நீனிறம்பின் னற்பிறைவெண் பெற்ற
மகன்மேற் பதுமா சனம் ௨௨௰
ஆருயிர்க டோறு மனைகா மகருணைந்தான்
சாரும் ரவுத்திரிதன் னை ௨௨௧
ஒண்பிரம ரந்திரக்தென் றாம்ப்புறம்பி லோர்பாதி
மண்டிலக்கோன் றந்தியில்வந் தி ௨௨௨
இவர்மூ வருஞ்செயற்குச் சான்றின ரென்றே
பவரொளி மண்டலத்த டங்கு ... ௨௨௩

நல்லநா லாஞ்சந்தி சத்தியுரு நாடுகுண
மல்லா தெனுகவெனி யே ௨௨௪
தீர்த்தம் வலக்கையாற் சேர்த்திடக்கை மேல்வலக்கை
சார்த்திச் சொலிச்சங் கிதை ௨௨௫
வரவௌஷ டங்கமூ லத்தாற் குடமுத் .
திரையான் முடியிற் றெளித்து ... ௨௨௬
பின்னுமந்நீர் சங்கிதையைப் பேசியெடுத் திடக்கை
தன்னிடைவைத் தேவீழ் சலம் ... ௨௨௭
அதிவௌஷ டந்தவஞ்சா லாறுற் புரோக்கிப்
பதுமார்ச் சனமென் பது ... ௨௨௮
இடக்கரத்திற் செடித்த நீர்வலக்கை யேந்திக்
கடித்தவற மாய்நினைந்து தான் ... ௨௨௯
இடநாசி யாற்புகுந்து பாவமரித் தேமை
யடைகுழம்பாய் நாசிவலத் தால் ... ௨௩௰
வீழ்வ தெனவெண்ணி யும்படந்த வத்திரத்தாற்
றாழ்புருவத் தின்னெரியாற் றான் ... ௨௩௧
வலப்பா லெரிவருணை வச்சிரக்கன் மீதவ்
வலக்கைநீ ருய்க்க மகிழ்ந்து ௨௩௨
அகமருட ணம்மீதப் பாலா சமித்தே
சகளீ கரணஞ் சமைத்து ௨௩௩

மனுஷர் வஷட்பூகம் வாய்க்க வௌஷட்டா
மினிய பிதிரா தியர்க்கு ... உசச
பேசுசுவ தாவாம்பின் ஹும்வேலன் டுவதர்ப்பிக்
காசமித்தூச் செய்தூதியா கம் ... உசரு
குறைபிரா சாதகத்தாற் கோலமுத்தி ரையா
லுறைவிங் கமுகாங் கொடுக்கு ... உசசு
அலரிக்கண் சங்கிகையி னலரனைத் தாழ்ந்தே
சிலமூலஞ் செப்பிநிவே தி ... உசஎ
சந்தியொன்று தற்காலந் தப்பிச் செயிற்பதினேர்
மந்திரஞ்சொல் பாவ மறும் ... உசஅ
ஏதமிலோர் சந்தி தவறியிடிற் சத்தியோ
சாதமெணிச் சாற்று சதம் ... உசகூ
மூன்றுசந்தி தப்பிலுரை முந்நூறு காமத்தே
லான்றவுப வாசமுஞ்செ யன்று ... உருய
ஈரிரு சந்திக் கிருநூ றறைகபன்னு
ளோராருஞ் சந்திதவ றில் ... உருக
ஓரா யிரமுரைக்க நோயுற்றார் நோயற்று
ரீராயுதத் தைப்பசியுற் றே ... உருஉ
ஆவலினே மத்தோ டபிடேகத் தோடமிகு
பாவ மொழியப் பகர் .... உருங

அனுட்டானம் முற்றிற்று.

சூரியபூசை.

அக்கிரக் கூடடைந்ன மாயாந்க மூப்பத்தோர்
தக்துவநெஞ் சாற்கடந்து தான் .... உருச
பூசையிடஞ் சுத்தவித்தை யாயெண்ணி நற்பொருளோ
டேசறுபூர் வம்பார்க் கிருந்து ... உருரு
தூய்யவத்திரக்காற்கை சோதித்து வௌஷடந்த
செய்யவன்மூ லத்காற்கை சேர் ... உருசு
பெருவிரற்பாற் றர்ச்சனிக ளாற்பே ணிதய
மருவ நிசிக்க மகிழ்ந்து ... உருஎ
பெருவிரலாற் பேசுகனிட் டாதிமுன் றின்பாற்
சிரசு சிகைகவசஞ் சேர்த்து ... உருஅ
தர்ச்சனிக்க ணங்குட்டத் தாலத் திரநிசிகை
சுற்றுகவ சத்தைச் சொலி ... உருகு
அத்கம் வவுஷடந்த மூலத்காற் கூட்டிடுக
வத்த நியாதமிது வாம் .... உகூ0
தேகசுத்தி மூலத்காற் செய்பின் பெருவிரலோ
டாகுங்க னிட்டைமுன்மூன் றால் ... உகூக
இதயஞ் சிரசுசிகை யின்க ணிசிக்க
விதயஞ் சிரசுசிகை யே ... உகூஉ

அதனிற் சடங்கழு லத்காலர்ச் சித்தே
கதிரத் திரங்கவசத் தால் ... உஎக
திக்குபந்த னத்தொடவ குண்டனஞ் செய்கவான்
முத்திரைமூ லத்தான் முயன்று .... உஎச
அந்நீர்கொண் டத்திரத்தி னற்பொருளைத் தன்னைநிலந்
தன்னைப்பு ரோக்கித்துத் தான் ... உஎரு
அத்திரத்தோர் பூப்பூசைத் தானத்திற் போட்டிடையூ
றத்தனையும் போக வறுத்து .... உஎசு
செம்பா தியிலன்றித் தண்டுலத்திற் செய்தவெண்டோட்
டம்புயத்தர்ச் சிக்க வறிந்து ... உஎஎ
தடமார் துவாரவலந் தண்டிகளைச் சாத்தி
யிடம்பிங் கலனைச்சாத் தி ... உஎஅ
வாசநளி னத்துக்கீ சத்தோர் மருப்பனைச்சாத்
தாசானைச் சாத்தழற்றிக் கின் ... உஎகூ
போதுநடு விற்பிரபூ தாசனம்பூ சித்தங்கி
யாதியினற் சிங்கங்க ளாம் ... உஅ௰
அருள்விம லன்சார ஞராத் தியனைப்
பரமசுக னைப்பூசை பண் ... உஅக
அதன்மீது வெண்பதும மாச்சித்துப் பூர்வ
மதுமுதலீ சானமீ றுய் ... உஅஉ

கேசரங்க ளிற்றீப்தை சூக்குமைகே மூர்ச்சனை
வீசுபத்தி ரைவிபூத் தி ... ௨௮௩
விமலை யமோகையுடன் வித்துதைபெண் சத்தி
யமல முறச்சாத் தமர்ந்து ... ௨௮௪
ஆபசர்வ தோமுகியைக் கன்னிகையீ சக்கருச்சித்
திவிப் புரமுத் திரை ... ௨௮௫
நாப்பணர்க் காசனமர்ச் சித்ததிற்செம் மண்டலநன்
னைப்பண்ணில் வெண்ணளினத் தில் ... ௨௮௬
இருக்கின்ற தாயிலங்கு தண்மா துளம்பூ
வருத்தங்கு மேனி யுடன் ... ௨௮௭
இருபுயம் பற்றிருவெண் கஞ்சமிரு கைபோ
டொருமுகங் கண்களுக ளம் ௨௮௮
கயமார்செங் தூசினதாய்க் காண்கடோர்க்கஞ் சேர்ரு *
ரியமூர்த்தி யானிசிமூர்த் தி ... ௨௮௯
இணையகலு நேத்திரத்தா னேத்திர மீந்தே
யிணாரஞ் சலியைநிறைத் தே ... ௨௯௰
நெற்றியில் வாங்கு நிகழருணை விந்துவைப்போ
துற்றவஞ்ச லிக்கு ளுனி ௨௯௧
உதவிதயத் தான்மூர்த்தி யெங்குமுற வென்றா
ழிதயத்தா வாகி யிசைந்து ... ௨௯௨

---

* கண்டுகடோர்க்கசூ பாடபேதம்

தாபனஞ் சன்னிதா னஞ்சன்னி ரோதனமுங்
தாபமக லப்புரிக தான் ... ௨௬௩
உதவிவிப்ப முத்திரையென் றாழி னுடைய
விதயாதி யத்தானத் தில் ... ௨௬௪
இதயாதி மந்திரங்க ளானிசித்தே மூல
மதனுலேகத்துவ மாக்கு ... ௨௬௫
செய்க தசதிக் கினுந்திக்கு பந்தனமுஞ்
செய்கவவ குண்டனமுங் தேர்ந்து ... ௨௬௬
அமுதமெனு முத்திரைமா முத்திரையு மாக்கு
திமிராரி மூலத்தி னால் ... ௨௬௭
நமர்சு வதச்சுவா காந்த நனுக
வமைத்த கடோர்க்கமனு வால் ... ௨௬௮
பாத்தியமுன் னீவௌஷ டந்தமூ லப்பகர்ந்தே
சாத்த றுகு பூக்தண்டு லம் ... ௨௬௯
கடோர்க்கத்தாற் கந்தகபிலாதி கைக்கொண்
டடுத்த வளத்தொடு மாட்டு ... ௩௱
அரத்தவுடை சாத்தி யணிந்து கந்தாதி
யாத்த வருவன் றனை ... ௩௱௧
அர்ச்சித்து மூலத்தாற் புட்பாஞ் சலித்திரய
மர்க்கியமு மீகவன்பி னால் ௩௱௨

பதுமவிப்ப முத்திரைக ளியற்று பரிந்தே
பிதமொழிலை யாங்கமர்ச்சித் தே ... ௧௱௩
பூசித்துப் போகாங்க பூசைப் பொருட்டியற்று
பேசற் றனுமதிபெற் றே ... ௧௱௪
இதய முதனுன் கிடத்தினின்று மங்க
விதயமுத னுன்கையும்வாங் கி ... ௧௱௫
கொதிகழலீ சன்னிருதி வாயுகோ ணங்கொட்
டிதயமுத னுன்கையுஞ்சாத் தி ... ௧௱௬
கதிரவன்முன் னேத்திரஞ்சாத் திக்கீழ்த்திக் காதி
யிதழ்நான்கி லத்திரஞ் சாத் தி ... ௧௱௭
இதயாதிச் சான்முத் திரைநேத் திரமாம்
அதனுக்குச் சோவிடா ணம் ... ௧௱௮
ஈந்து திராசனி முத்திரையை யத்திரத்திற்
கீந்துபூர் வாதிநான் கின் ... ௧௱௯
இதழ்நுதியிற் சாத்திந்து புந்தி பிரகற்
பதிசுக் கிரனைப் பரிந்து ... ௧௱௰
அனன்முதனற் றொட்டினுதி யங்கா ரகனைச்
சனிராகு கேதுவைச்சாத் தி ... ௧௰௧
ஈந்து நமக்கார முத்திரையை யிங்கிவர்கட்
கீந்துடுக வாய்ந்தவர்க்கி யம் ௧௰௨

சூரியனுக் குத்தூப தீபநை வேத்தியந்தா
நீரடைக் காய்தர்ப்ப ணம் ... ௧௰௩
சத்திர சாமரநல் லாசமன மர்க்கியத்தோ
டொப்பி னுபனிதயத் தால் ... ௧௰௪
மூலஞ் சிலகூறி யர்க்கியநன் னீரினொடு
மூலத்தா லீகவென் றாழ் முன் ... ௧௰௫
அங்கங்கட் குந்தசத்தி லொன்று செபித்தளித் தப்
பங்கமற வேத்திப் பணிந்து ... ௧௰௬
ஆய்ந்தகடோர்க் கத்தாற் பராமுக வர்க்கியத்தை
யீந்தென் பிழைபொறுப்பா யென்று ... ௧௰௭
உம்படந்த வத்திரநா ராசவுயர் முத்திரையால்
அங்கமனு வாதியெழுப் பாய்ந்து ... ௧௰௮
சுத்தகடோர்க் கசூ ரியமூர்த்தி யாற்றிய
முத்திரையால் யோசியினன் முன் ... ௧௰௯
பன்னிதயப் போதிற் சிவவருணன் பான்மூலந்
தன்னு லொடுக்கவனைத் தான் ... ௧௨௰
வளர்தோ சண்டனையி சானத்திற் சாத்தி
யொளிர்மா லியமீந் தொடுக்கு ... ௧௨௧

சூரிய பூசை முற்றிற்று.

சிவ பூசை.

ஆசமனஞ் செய்துசக ளீகரணஞ் செய்துவெணீ
றுசகளுங் கண்டி யணிந்து ... ௩௨௨
வந்தத் திரசுசிசெய் தேபாத் திரம்வைஷ
டந்தவித யத்தாற்பூ ரித்து ... ௩௨௩
எழ்காலோங் காரமர்ச்சி சாமானி யார்க்கியத்தை
யேழ்கா லபிமந் திரி ... ௩௨௪
வான்றிக்கு பந்தனஞ்சீர் மன்னுமவ குண்டனஞ்செய்
தான்முத் திரையு மளித்து ... ௩௨௫
அதன்மேற் றுவாரமத்தி ரத்தாற் புரோக்ஷி
ஷிதிவாசன் மேற்படியின் மேல் ... ௩௨௬
தென்பாற் கயமுகன்வாக் காள்வடபா னற்செய்யா
ளன்பா னடுவுறச்சாத் தாங்கு ... ௩௨௭
தனக்குத்தென் சாகை தனினந்தி நந்தி
தனக்கு வடபா றனில் ... ௩௨௮
கங்கை யிதற்குவட சாகையின்மா காளனைச்சாத்
தங்கவன்றென் பால்யமுனை யாம் ... ௩௨௯
அரிதே லனைவரையுங் கூட்டியருச் சித்தே
புரைசெய் நிரீக்கணத் தோடு ... ௩௩௰

கிசிக்குழு லஞ்சேரு நேத்திரத்தான் மேல்பார்த்
நசைத்தலின் விக்கின மும் ... ௧௧௧
ஈருமலர்சேர் நாராச முத்திரைசேர் ரும்பட்
டிருதியத் திரத்தா விடை ... ௧௧௨
விக்கினமும் பாசுப தாத்திரஞ்சேர் மெய்வலைத்தா
டக்கமுத் தாடனத் தால் ... ௧௧௩
இருநில விக்கினமு மென்றெங்கு நின்ற
திரிதல விக்கினமுந் தீர்த்து ... ௧௧௪
சிவமார் கிழ்ப்படிநாப் பண்ணைத் திரத்துவார
பாலன் றனைப்பூசை பண் ... ௧௧௫
வாத்து பதியைமணிக் கர்ப்பக் கிரகத்துட்
சாத்து நிருதி தனில் ... ௧௧௬
சுத்திநான் குற்றகும் பங்கோய வத்திரத்தை
மந்திரமீ ராற்சுத்தி யாக்கு ... ௧௧௭
புதநீர் வெயிற்படாப் பாணிமுத ஞானீர்
விதமன்றி நன்னீர் விழைந்து ... ௧௧௮
இதயத்தி னல்வடித் தேனைப் பொருளும்
விதிமுறைபாங் காகவைத்து மேல் ... ௧௧௯
மண்டுச்சங் கன்னெய் திரண மொளிமாய்க்கும்
என்மூங்கி லொற்கமகற் றீங்கு ... ௧௨௰

புலிச்சரும முத்திய மாடைபிணி போக்குங்
கலைச்சரும ஞானசித்தி காண் ... ௫௪௧

கம்பளந் துக்கங் களையு *மிவற்றொன் றிற்
சம்புவின்றென் பாலிருந்து தான் ... ௫௪௨

பூசை யிடமத் திரப்புரிசைக் குட்கவசத்
தாசிலவ குண்டனத்து ளாக்கு ... ௫௪௩

கோதில் சரநியாசஞ் செய்துபதாங் குட்டமுதல்
ஆதார மட்டுமிரன் டாய் ... ௫௪௪

உச்சியள வாயோ ருருவா யிதயமுத
லுச்சியந்த மைஞ்சிடத்தி னும் ... ௫௪௫

இடைபிங் கலையினூற் பின்னலூற் றுங் கீழ்நோக்
குடையகஞ்ச மொட்டைந் தொடும் ... ௫௪௬

தாவாரத் தி னேடுஞ் சுழுமுனைபா லித்தத்
தாவாரத்துள் ளும்புறத்தி னும் ... ௫௪௭

புத்தமு தத்தைப் பொழிபரா காசமயச்
சத்தியைச்சிந் தித்துநெஞ்சிற் றூன் ... ௫௪௮

ஊங்கார மான திக யத்தொலிப்ப தாகவுன்னி
வாங்கி வளியுண் மறித்து ... ௫௪௯

வழுக்கிலூங் காரத்திற் சித்தத்தை வைத்தே
யெழுப்பிவளி மேனோக்க வே ... ௫௫௰

---

* 'மிவற்றிலொன்று' பாடபேதம்.

அம்புயமொட் டைந்தலர்ந்து மேனைக்கச் சோடிகையால்
உம்படென்றைங் காற்றெறிக் துற்று ... ௧௫௧
வாயு லைத்துவிடுத் துப்பூரித் துக்கும்பித்
தோயுமித யக்கமலத் தில் ... ௧௫௨
வீங்கொளிவான் மீன்போலு மம்மெனெழுத் தாமனுவை
யூங்காரத் தூச்சி யுற ... ௧௫௩
சான்மே லெழுப்பிச்சங் காரமா முத்திரையா
லான்மாவை யான்மமனு வால் ... ௧௫௪
தூவாதசாந் தத்தான்பாற் கூட்டியின்பந் துய்த்த
வாவுறுவா னுக வறிந்து ... ௧௫௫
சத்தப் பரிசமயன் பாவிரத மாறன்பான்
மெத்துருவங் கந்த மிவை ... ௧௫௬
உருத்திரன்பாற் புந்தியாங் காரமுன்னி சன்பாற்
பரிக்குமனம் விந்தைமுகன் பால் ... ௧௫௭
ஐவ ரிடத்து மறைந்த முறையொடுங்கச்
செய்வதுடற் சூக்குமசுத் தி ... ௧௫௮
பீத முரம்வச் சிரம்லா மெனும்பீசம்
ஓதுசத்தி யோசாதத் தோடு ... ௧௫௯
பிரம னிவர்த்திகலை நாற்கோணம் பெற்ற
வுருவார் பிருதிவியை யும் ... ௧௬௰

வெண்மை நெகிழ்ச்சி பதுமமுவீ மென்பீசம்
வெண்மையுறு வாமமனு ... ௩௯௧
வெற்றியமர் மாஸ்பிரதிட்டை வெண்மதியின் பாதியுரு
வுற்றவொட்டு மண்டலத்தையும் ... ௩௯௨
செம்மை சுவத்தி யுருமெ னெழுத்தகோரம்
வெம்மையுருத்திரன்வித்தை ... ௩௯௩
உருமுக்கோணத்தே யுவையுங் கருமை
யுறுவிந்தைகமென் னும்பீசம் ... ௩௯௪
புருடமீ சன்சாந்தி பொற்பிருமுக் கோண
மருவொலியை யும்புகைவன் னம் ... ௩௯௫
சிதாமிர்த விந்தௌவா மென்னெழுத்தீ சானஞ்
சதாசிவஞ் சாந்தியதீ தை ... ௩௯௬
வட்டம் வெறுவெளியை யும்முடற்க ணைங்குமா
யிட்டமுற வெவ்வே றெணி ... ௩௯௭
வாங்கியிடை யான்மறித்து மேனோக்கிப் பிங்கலையா
லோங்கி விடும்போ தொலி ... ௩௯௮
அருத்தி நிவர்த்தியிலா மென் னுமெழுத் தைங்கா
ருரைத்துமணி லிங்குணத்தை யோட்டு ... ௩௯௯
சுழும்பிர திட்டையுவீ மென்னெழுத்தை நாற்கா
லுறைந்தநீர்க் கன்றைன் சறு ... ௪௱

விளங்குவித்தை தன்னினுரு மென்னெழுத்தை முக்காற்
கிளந்தனற்கண் மூன்றாங் கெடு ... ௧௭௧

சாந்திதனி லைம்மென் னெழுத்திரு காற்சாற்றி
வாய்ந்தவளிக் கண்ணிரண்டு மாற்று ... ௧௭௨

சாந்திய தீதை தனிலெள்வா மென்பதுரைத்
தோர்ந்தொழிக்க வான்குணமொன் றாம் ... ௧௭௩

தம்பதிவிர்க் காதி தனித்தனிகூ றம்பொதி
லும்படர்ந்த மங்கலைவையென் றோர் ... ௧௭௪

மாநிலமுன் னைந்திலையும் வாயுத்தேயுப் புனன்மண்
ஞானபரா காசத் தடர்த்து ... ௧௭௫

அவையவை யின்வடிவா யாக்கையைச்சிந் திக்கே
தவையிலத்தி ரத்தை நவின்று ... ௧௭௬

வலக்காற் பெருவிரலில் வந்த கனலாற்
றொலைத்துடலிற் குற்றமனைத் தும் ... ௧௭௭

சத்தியமு தத்தாட் புறம்புகனைத் தாக்கையினைச்
சித்த மெனும்பதுமத் தில் ... ௧௭௮

மூக்கலையோங் கார மொழிந்தகனற் சுத்தவித்தை
மிக்கதவி சாக்கியதன் மேல் ... ௧௭௯

ஓங்குநான் கார்கலையோங் காரத் திலாத்தும்
வாக்கியுடற் சூக்கமத்தை வைத்து ... ௧௮௰

அதிலிங் கலைப்பிரா வத்தொ டானால்
அதினாரைக்கு மான்மமனு வால் ... ரு-அக
அதிற்பூர கத்தாற் றுவாதசாங் கத்தும்
பிரித்தனுவை வைத்ததற்குப் பின் ... ரு-அஉ
சுபமாம் வௌஷடந்த சத்திமனுச் சொல்லி
யபிடேகி விந்தமுதத் தால் ... ரு-அங
அங்கநியா தஞ்செயிலை பூதசுத்தி யாகுநலந்
தங்கு மிதயந் தனில் ... ரு-அச
சோதிலிங் கத்திற் றுவாதசாங் கத்தினின்று
மாதிதனை யாவாகித் து .... ரு-அரு
அலராதி யாற்புறம்போ லர்ச்சித்து நாபி
நிலைபெறுங் குண்டத் தினில் ... ரு-அசு
வன்னியின்ஞா னக்கினியை வைத்துமலி விந்தமுதான்
மன்னுபுறம் போற்புரிந்தோ மம் ... ரு-அஎ
வேள்வி யுதிக்கு மிகுபயனை வேட்கையுடன்
றாழ்வி லயற்களித்துத் தான் ... ரு-அஅ
விந்துத்தா னந்நடுநேர் மிச்க சிவனையுன்னி
வந்துபுறப் பூசைகொள்வ தற்கு ... ரு-அகூ
அனுமதிகொ ளந்தரியா கந்தானு மாயில்
இனியவுயிர்ச் சுத்திபதா மே ... ரு-கூ௰

6

சிகைகவ மக்கிரமு லஞ்செப்பிச் செங்கே
னுருமலா லர்ச்சித் துடன் ... ௪௱௧
நிச்சுபந்த னத்தொடவ குண்டனஞ்செய் தேகேனு
முத்திரையு மீந்து முறை ௪௱௨
மருவருக்கி யத்தத்தி ரத்தாற் றனைவான்
றிரவியத்தி னைச்சுசிசெய் தே ... ௪௱௩
அப்பியுக்க ணங்கவசத் தானுமபி மந்திரித்தல்
செப்பிதயத் துஞ்செறிவித் தே ... ௪௱௪
அவகுண் டனம்புரிந்தான் முத்திரையிந் தர்க்க
நனையறுநீ ரிற்பூ நனைத்து ... ௪௱௫
மஞ்சனகும் பத்திட்டான் முத்திரைவாய்ப் பக்கொடுக்க
வெஞ்சாத் திரவியசுத் தி ... ௪௱௬
உன்னு சனத்திற் சிவாதன முன்மார்பின்
முன்னுசிவ மூர்த்தி மொழிந்து ... ௪௱௭
சாத்திச் செழுஞ்சந் தனத்திலக மிட்டுப்பூச்
சாத்திமூலத்தாற் றலை ... ௪௱௮
அரன்மயந்தா னாகி யிருசுவந் தீர்க்க
மொருவாப் புனுத முற ௪௱௯
ஓங்கார மாதி நமோந்த முறமனுக்கள்
பாங்காகப் பையப் பகர்ந்து ௪௱௰

மந்திர சுத்திசெய்து மஞ்சன வேதிகையிற்
சந்தக் கலைவிரித்துத் தான் ௪௱௧
அங்கத னாப்ப னனந்தனைச் சாத்திடுக
வங்கிமுன்னாற் கோணமனை யில் ... ௪௱௨
அர்ச்சி கருமமொடு ஞானவை ராக்கியத்தை
யர்ச்சி யைசொரியத் தை ... ௪௱௩
ஓது பதுமமேற் சாத்துனாட் பாரினாப
ரிதுசடுக் காசனமா மே ... ௪௱௪
இருத்தி யகிலிலிங்க மாசன மூர்த்தி
திருத்தமா மூலத்தி னால் ... ௪௱௫
வர்ச்சித்து நேத்திரத்தை மற்றையங்கத் தாலென்பூ
வர்ச்சிக் கனித்தருக்கி யம் ... ௪௱௬
ஈந்துது பங்கிபம் பூவையத்தி ரத்திறக்கி
யாய்ந்தகண்டிக் கிசத் தமை ... ௪௱௭
ஆட்டிநீ ரெண்ணைமாக் காப்புமஞ்ச ளாதிநெல்லி
யாட் டியரற் குக்கௌவி யம் ... ௪௱௮
பஞ்சாமிர் தத்தைப் பரிந்தபிடே கித்தானெய்
பிஞ்சுமதி யார்க்காட்டிப் பின் ... ௪௱௯
இளவெந்நீ ராட்டி யிடிதிமிர்ந்து வில்லம்
வெளியகர்ப்பூ ரந்திமிர்ந்து மேல் ன ௪௱௰

செழும்பா றயிர்தேன் றெளிகருப்பஞ் சாறு
கொழும்பல் கனிச்சாறு கொண்டு ... ௪௨௧
ஆற்கனைவமு லத்தாட்டி யாட்டி யிளநீர்
மருப்பூவர்ச் சித்துவிடா மல் ... ௪௨௨
இடையிடைநீ ராட்டியளித் தேதூப தீபஞ்
சடைமுடியார்க் கட்டபுட்பஞ் சாத்து ... ௪௨௩
தங்குருத்சுப் புற்கவசத் தாற்சாத்தி மூலந்தா
லங்காற் பதாகையினா லாட்டு ... ௪௨௪
பதினொருமா மந்திரம் பன்னுபு நீர்முன்
விதியினா லாட்டு விழைந்து ... ௪௨௫
மேய வியோம வியாபிமுத லாமனுவா
லாயிரந்தா ரைப்புன லாட்டு ... ௪௨௬
தண்கந்த மார்நீரை வேண்டளவுந் தானாட்டித்
தண்சந் தனக்குழம்பு சாத்து ... ௪௨௭
நவகலச மாட்டிபந்தத் தில்லர்க் கியநீர்
அவமிலித யத்தினா லாட்டு ... ௪௨௮
சாத்தியொற் றுடைபீ டத்திருத்தியோர் தண்பூச்
சாத்திலிங்க சுத்தியாந் தான் ... ௪௨௯
ஐங்கரனை வாயுதிக்கி லான திருவடக்கிற்
றங்கியிடத் தென்முகமாச் சாத்து ... ௪௩௦

செப்புஞ் சதாசிவா னந்தர்சி கண்டகுரு
வொப்பிலம்பி காகுரு வோடு ... ௪௯௧
கந்தர்விண் டுப்பிரம னைச்சருதீ சானதிக்கில்
அந்தவா றர்ச்சித்தன் பால் ... ௪௯௨
அதிபீ டத்தின்கி ழாக நடுவினிற்சாத்
தாதார சத்தி யறைந்து ... ௪௯௩
சாத்தும் பிரமசிலை மேலனந் தாசனத்தைச்
சாத்தனந்தன் றன்னையதிற் றான் ... ௪௯௪
மீதான்முக் கோணவனந் தாசன மேலெரிதா
ஞதிநாற் கோணமமைவ யில் ... ௪௯௫
சாத்திடுக தன்மாதி நான்கு மதன்மாதி
சாத்துகபூர் வாதிதிக்கிற் றான் ... ௪௯௬
சொலுமதற்கு மேற்பீடத் திற்றாய மென்மே
சலேச்கீழ் நிருதிதிசைக் கண் ... ௪௯௭
சாத்திடக் கர்ச்சதனத் தையதன்மே லீசதிக்கிற்
சாத்தூர்த்து வச்சதனத் தை ... ௪௯௮
இதுசதுரச் சிங்கா தனமத னுப்பான்
புதுமையுறு கந்தம் பூசித்து ... ௪௯௯
வளர்பீச மங்குரநா ளஞ்சாத்தி மற்றைத்
தளங்கல்வ பத்திரத்திற் சாத்து ... ௪௪௰

அத்தன்மூ லத்திற்பி டத்திற்கு மேலாகச்
சித்திரக் கேசரஞ்சாத் தி ... ௪௪௧
வாய்த்தபீ டத்துன் னதமாக மத்தியத்திற்
சாத்திடுக கன்னிகைபீ சம் ... ௪௪௨
பன்மை புறப்புறபத் மாசனஞ் சாத்தியுன்னி
பெண்கோண வாசனமீ தோர் ... ௪௪௩
கேசரத்திற் கீழ்த்திசை யாதியீ சானமந்த
மாசற்ற வாமைசேட் டை ... ௪௪௪
இரவுத் திரிகாளி யோரார் கலவி
காணி பெலவிகர ணி ... ௪௪௫
பேசு பெலப்பிரம தன்னிப்பேர்ச் சத்தியுட
னோசருவ பூததம னி ... ௪௪௬
சாத்திலிங்க மூலத்திற் கன்னிகையீ சானத்திற்
சாத்து மனோன்மனியைத் தான் ௪௪௭
ஒப்பிகந்த வட்டமுறும் பத்மா சனமுபர்நூல்
செப்பிடுமீ தென்றே தெளி ... ௪௪௮
இகழ்ந்துவிவட் டத்திரவி மண்டலமு மீதிற்
றதிபதியாம் வேதனைச்சாத் தாய்ந்து ... ௪௪௯
கேசரவட் டாக்கிரத்தி லிந்துமண்ட லம்மா
லேத்தி லதிபதிசாத் தி ... ௪௫௰

கன்னிகைவட் டத்திலுதி வன்னிமண்ட லங்கருத்தா
வென்னு முருத்திரற்சாத் தி ... ௪௫௧
கன்னிநாப் பண்சத்தி மண்டலத்தி னைக்கருத்தா
வென்னு மகேசனைச்சாத் தி ... ௪௫௨
தவாவறு கோணவிம லாசனமீ திங்ஙன்
சிவாதனம்பா வித்திதிற்சாத் தி ... ௪௫௩
புலிங்க வழுற்றம்பம் போன்றசிவ மூர்த்தி
யிலிங்கவட் டத்திற்சாத் தி ... ௪௫௪
சிரமாதி பாதாந்தந் தெண்டபங்கி தன்னாற்
றிரவீசா னாதிநிசித் தே ... ௪௫௫
இலங்கீசா னாதிமுடிக் கண்ணம் மனுவால்
அலங்குமுண்ட பங்கி யமைத்து ... ௪௫௬
படிகநிறம் பீதங் கருமைபகர் சோணம்
வடிவாகும் வெண்மைநிற மாம் ... ௪௫௭
வத்திரமீ சானம் புருடமகோ ரம்வாமஞ்
சத்தியோ சாதமுகஞ் சார்ந்து ... ௪௫௮
இந்தார் சடைமுடியைந் தைம்மூன்று கண்ணுமெழி
லுத்துகரம் பத்துமவற் றுள் ... ௪௫௯
ஒண்மைவேல் வாள்சூலங் கட்டுவாங் கத்தொடருள்
பண்வாத நல்வலப்பா லும் ... ௪௬௰

துடிமா துளங்கனிது நாகமுட னக்க
வடநீலப் பூவாமத் தும் .... சசுக
படிகநிற மும்பங்க யாசனமும் வெங்கட்
படவரவ நாலும் படைத்து ... சசுஉ
நந்துவித்யா தேகமெண்ணி நாட்ட மிகப்பிரம
ரந்திரமட் டாக வறைந்து ... சசுங
ஆங்கதுமின் போலப்பூ வஞ்சலிக்கு ளானதுவா
வோங்குமூர்த் திக்கணிசி யுற்று ... சசுச
நேத்திரத்தை மைமுகநாட் டத்தி னிசித்துமலர்
சேர்த்தஞ் சலியத்தத் தில் ... சசுரு
மேதைமுத லீரெண் கலைபடைந்த மிக்கவொளி
யாதவனோர் மூலமனு வை ... சசுசு
வய்ந்த வியற்பூ ரகத்தொடிசை யத்துவாத
சாந்த மளவுச் சரித்து .... சசுஎ
அந்தமின்ஞா னனந்த மாஞ்சிவத்தி னைக்கோடி
யிந்துவொளி யாகநினைத் தே ... சசுஅ
இறக்கிவிந்து விற்புட்ப வஞ்சலியி னுக்குள்
ளுறப்பிரா ணச்சரியா லுற்று ... சசுசு
இருதயத்தான் மூர்த்திப் பிரமரந்தி ரத்தே
திரமுறவா வாகனஞ்செய் தே ... சஎய

நன்று விதயத்தின் கட்குலவு தாபனஞ்செய்
தன்றுறச்செய் சன்னிதா னம் ... ௪௭௧
பந்த முறச்சன்னி ரோதனமுஞ் செய்கசெயல்
அந்தந்த முத்திரையா லாம் ... ௪௭௨
வினவிச்சு வாகதமே யீசனருள் பெற்றுத்
தனியகில நாதவுன்றன் னை ... ௪௭௩
பாவமறப் பூசை பண்ணளவு மிவ்விலிங்க
மேவியருள் வாயெனவே ண்டி ... ௪௭௪
அளித்துச் சுவாகத வர்க்கியந் தன்னைக்
களிக்குமித யஞ்சிரஞ்சி கை ... ௪௭௫
உயர்கவச மத்திரத்தை யுன்னிதய மாதி
யியல்காரத் தத்தினிசித் தே ... ௪௭௬
தொக்கமூ லத்தினு லேகத்து வஞ்செய்து
திக்குபந்த னத்தினைச்செய் தே ... ௪௭௭
அவகுண் டனஞ்செய் தறிவுக் கறிவாஞ்
சிவனெதிரான் முத்திரைசேர்த் தே ... ௪௭௮
வருமெவள ஷடங்கமூ லத்தான் மகாமுத்
திரையு மவனெதிரிந் தே ... ௪௭௯
அஞ்சுமுக முத்திரைய ளித்தேதந மச்சுவதா
மஞ்சார்சு வாகாந்த மாய் ... ௪௮௰

பாத்திய மாசமன மர்க்கியம்பன் பார்மூலத்
தாத்தனுக் கன்போ டளித்து ... ௪௮௧

அறுகரிசி பூவெள்ஷ டந்தமூ லத்தால்
இறைதன் முடிமிசைச்சாத் தி ... ௪௮௨

அளித்தயஞ் சேர்மூலத் தாற்றாப திபம்
அளித்தா சமனர்க்கி யம் ... ௪௮௩

எண்ணெய்க்காப் பாதிகருத் தாலெண்ணி யாட்டியெங்கள்
அண்ணலை யாட்டியர்க்கி யம் ௪௮௪

பாத்திய மாதிமூன் றும்பரிந்திங் தொற்றுடை
சாத்தியே சந்து தரித்து ... ௪௮௫

அரிசி யறுகுவில் லம்மலர்பூ ணுடை
கருபூணு லாதி தரித்து ... ௪௮௬

முத்தத்து வாதி பதிமுடிவி லஞ்செழுத்தாங்
செப்பிமுப்புட் பாஞ்சலிசெய் தே ... ௪௮௭

சூட்டியின்டை வாச மலர்த்தொடை மாலையணிந்
தாட்டிமணி யத்திரத்தி னல் ... ௪௮௮

அளித்தேதூ பந்தீப மாசம னர்க்கம்
அளித்தே முகமுடியைந் தில் ... ௪௮௯

மனோரத முத்திரைகாட் டிப்பிரம மைந்தை
யுனுமங்க மோராறை யும் ... ௪௯௰

இலயாங்கத் தர்ச்சித்தே போகாங்கஞ் சாத்த
வலவை ரனுமதி யுற்று ... ௪௯௧
அர்சித்தே மூதத்தா னைம்முடியி லீசானந்
தற்புருட மைவதனத் தும் ௪௯௨
இதயகுய்ய தேசத் தெழிற்கோரம் வாமம்
பதாதிகளிற் சாதமும்பாங் காய் ... ௪௯௩
வாங்கியீ சானம்பூர் வந்தென் றிசைவடக்குத்
தாங்குமேற் கிற்றளத்திற் சாத்து ... ௪௯௪
நேத்திரத்தை நேத்திரத்தி னும்வாங்கி நேசமுடன்
சாத்திசா னர்க்குக் கரம் ... ௪௯௫
இருதயத்தை வாங்கியதி லங்கியிலர்ச் சித்தே
சிரதேசத் திற்சிரம்வாங் கி ... ௪௯௬
நிறைநேத் திரம்வடக்கிற் சாத்திநிரு திக்கண்
சிகையையதில் வாங்கிச்சாத் தி ... ௪௯௭
கவசத்தினைச் சருவாங் கத்துநின்று வாங்கித்
தவறகல வாயுவிற்சாத் தி ... ௪௯௮
காங்களிற்கொண் டத்திரம்பூர் வாதிநாற் கஸ்சாத்
திருந்தபுரு டாதிக் கிடம் ... ௪௯௯
ஆவாக னுகிபாத்தி யாதியல ராலர்ச்சி
பாவனைமே லர்க்கமளி பாங்கு ... ௫௱

தூயதே னுப்பதுமஞ் சூலமக ரஞ்சுருக்கோ
டாயவைந்து முத்திரையி னோ ... ௫௱௧
ஈசனு திக்கீந் திருகைகுவி முத்திரையை
யாசறுமங் கத்திற் களித்து ... ௫௱௨
அரற்குமூ லத்தாற்புட் பாஞ்சலி யீந்தே
பாற்குமகா முத்திரையும் பண் ௫௱௩
ஈசனே டேகரிவ ரென்றுதூ பந்தீபம்
ஆசமன மர்க்கிய மீந்து ... ௫௱௪
போற்றுநா னுவிதநை வேத்தியமீர் பொற்கலத்தில்
ஏற்றிநாற் சுத்திபுரிந் தே ... ௫௱௫
கூறிச்சு வாகாந்த மூலங் கொடுத்திடுக
கூறுபிர மாங்கத்திற் கும் ... ௫௱௬
நிவேதியவர் மந்திரத்தி னில்வெவ்வே றின்றேல்
நிவேதியொரு பாத்திரத்தி னில் ... ௫௱௭
ஆசமன மீந்துகைதூ வட்டியடைக் காய்வாசம்
ஆசை யதனே டளித்து ... ௫௱௮
அர்க்கியமீந் தர்ச்சித்துத் தூபதீ பாசமனம்
அர்க்கிய மீசற் களித்து ... ௫௱௯
சறுவதத்து வாதிபதி மந்திரத்தைச் சாற்றி
யறுகரிசி புட்பமத னல் ௫௱௰

பவுத்திரஞ் சாத்தியா ராத்திரிகக் கைப்பன்
னுவப்பொடுநாற் சுத்தி யுற ... ருகக
மெலச்சுவா காந்த கவசம் விரும்பிச்
சொலிக்கிழ்மேன் மும்முறை சூழ்ந்து .... ருகஉ
ஈகவெழி லாசமன மர்க்கியநீ ருடிகுடை
யாய்கவரி யாலவட் டம் .... ருகங
உகந்திடையி லாசமனுர்க் கங்கவொடு மூலம்
பகர்ந்துபணி மாறப் பணி ... ருகச
ஈரென் கலையெய்து மூல மனுவியம்பி
யெருறுபுட் பாஞ்சலியிந் தே ... ருகரு
அகமீரு மாமுக் திரையகனே டைந்து
முகமுக் திரையளித்து முன் ... ருகசு
வண்டுணர்கைக் கொண்டிதயக் தாற்சாற்று மக்கவடங்
கொண்டுவலக் கையிற் குறித்து ... ருகஎ
ஆற்றுமூ லத்தா லமையநாற் றெட்டுரு
வேற்றிச் செபம்பண்ணி யே .... ருகஅ
கதுவக் திரங்கவசங் காம ரிதயம்
எதிர்சம் புடிக்கியா தி ... ருககூ
காப்பொ டவகுன் டஞ்செய்து கைப்பூவை
வாய்ப்பவலப் பாணியில்வாங் கி ... ருஉ௦

அர்க்கியமீ ரேற்றுப் பவமுத் திரையதனை
நிற்றமுழுங் காணிலத்தூன் றி ... ௫௨௧

அரியசெபங் கன்ம முயிரையித யத்தால்
அரன்வரதங் தன்னி லளித்து ... ௫௨௨

பிரமாங்கத் திற்குமதிற் பத்திலொன்று பேணித்
திரமாச் செபித்துநிவே தி ... ௫௨௩

அங்கிதிக்கிற் றன்குரு மூர்த்தியர்ச்சித் தங்கதனிற்
சங்கரனைப் பூசித்துத் தான் ... ௫௨௪

போகமெனும் பீடம் வித்தியா பீடத்தை
யேகனுக்கு மேற்கிலற்சித் தே ... ௫௨௫

அற்றான் பிரதக் கணைமரும்பூ சைப்பயனைப்
பற்றா னடிப்பனெனப் பார் ... ௫௨௬

துப்பவிரைப் புட்பாஞ் சலித்திரையஞ் செய்துதுதி
செய்துபிர தக்கணமுஞ் செய் ... ௫௨௭

சிரங்கன்னந் தோண்முகம்வாய் செங்கைகளோ டெட்டு
மிரும்புவியிற் சேர விறைஞ்சு ௫௨௮

விருப்பொ டருகால மாதியில் வேண்டி
யருச்சிக்கும் வண்மையறி யில் ௫௨௯

அருக்கியொடு மாசன மூர்த்திமூ லத்தாற்
திருத்தமுறச் சம்புவைச்சாத் தி ... ௫௩௰

போகாங்கத் தூம்பிரம நேத்திரமங் கம்பூசி
நீகனிக்க சந்திநெயண்ணி யே ... ௫௩௧
சிவனுக்கு விண்ணப்பஞ் செய்தோமஞ் செய்வான்
அவன்யாகத் தான மடை ... ௫௩௨
அதற்கதி காரமின்றே லட்டபுட்பத் தாதன்
மதிக்கபிர மாங்கத்தா தல் ... ௫௩௩
சாத்திப் பாராமுக வர்க்கியமீந் தேபூசை
சாற்று முறைமுடிக்கத் தான் ௫௩௪
அதிகார முற்றுவலி யற்றலோ மத்திற்
பதின்மடங்கு செய்து செபம் ... ௫௩௫
மானிடமேல் திக்களித்துப் பூசைமுடி வலியோ
டானசம் பத்துமுண்டா னல் ... ௫௩௬
தேசுதரு மங்கிதனிற் காரியஞ்செய் வான்செப்பி
யீச னனுமதிபெற் றே ... ௫௩௭
அற்கியத்தோ டங்கிமேற் குக்கிழக்கிற் குண்டந்தா
னற்றண்டி லந்தா னனுகு ... ௫௩௮
உத்தரந்தான் பூருவந்தா னேக்கியுறை குண்டத்தைச்
சித்திக்க நாற்சுத்தி செய் ... ௫௩௯
கனனமவ கிரணம் பூரணங் காசற்ற
சமீக ரணஞ்சே சனம் ... ௫௪௰

குட்டனஞ் சம்மார்ச் சனஞ்சமா லேபனங்கூ
றெட்டுஞ்செய் தர்ப்பையின்வா ளின் ... ருசக
குண்டநடு விற்குசையா லத்திரத்தாற் கூர்நுதிசி
ருண்டாம்பூர் வத்தி லுற ... ருசஉ
திரிரேகை கீறி நுதிவடக்கிற் செல்ல
வொருரேகை கீறி யுவந்து ... ருசங
செய்துகவ சத்தப்பி யுக்கணைஞ்செய் யுஞ்சேடஞ்
செய்ததுவா கப்பாவித் தே ... ருசச
கட்டங் கலையுமதன் கண்ணிதயத் தாற்கூர்ச்ச
விட்டாத்தை வைத்ததன்றன் மேல் ... ருசரு
ஆகம் பசியவளா யுலகிற் காயிருது
வாகிநீர் மூழ்கின ளாய் ... ருசகூ
உடையணி மாலேவிளங் கோர்முகங்கஞ் சம்போன்
றிடுகண்கண் மூன்றினளா யே ... ருசஎ
மதியுறவா கீப்ஸ்வரியை யன்னவண்மூ லத்தால்
விதியுறவா வாகிபா வித்து ... ருசஅ
வலத்தபைய கூர்ச்ச மிடத்தக்க மாலே
யலக்கணறுக் கும்வர தம் ... ருசகூ
அணுகுவா கீசரைச்சிந் தித்தவர்மூ லத்தால்
அணுகிடச்செ யாவாக னம் ... ருருய

இனியவிந்து நாத மிருவர் வடிவென்
றெனியர்ச்சித் தர்க்கியமீந் தே ... ருருக
புங்கவெஞலி கோலாதி யிற்றமுருன் புண்ணியர்
தங்கு மனையங்கி தான் ... ருருஉ
வளர்தூய பாத்திரத்து வாங்கி யதிலோர்
கிளர்சகலந் தென்மேற் கினில் ... ருருங
அரக்கர்கூ றத்திரத்தாற் போக்கிநாற் சுத்தி
வருத்தியங்கி முலமனு வால் ... ருருச
சங்கார முத்திரையாற் பூரகத்தி னேடுதயங்
கங்கியையுள் வாங்கியிடை யால் ... ருருரு
அங்கும்ப கத்தாலுந் திக்தீவிந் துத்தானத்
தங்கியுடன் கூட்டுகவொன் ருய் ... ருருசு
வாய்த்த விரேசகத்தான் மன்னியநற் பிங்கலையாற்
பாத்திரத்தி னிற்றீயின் பால் ... ருருஎ
வன்னிசை தன்னிய மந்திரத்தாற் றீபகத்தொத்
தன்னவங்கி பீசந் தனை ... ருருஅ
உற்பவ முத்திரையி னுலொருமை யோடுறவைத்
தற்சித்துச் சங்கிதையி னுல் ... ருருகூ
சீரியநெஞ் சத்தாற் சிறந்த பரமேசன்
வீரியம தாகப்பா வித்து ... ருகூ0

வாகி சுரிகர்ப்ப நாடியில்வா கீசுரரால்
வருவதா கப்பாவித் தே ... ௫௬௧
ஆபத் தகற்றி யருள்புரிமூ லத்தினுற்
றுபித்துக் கேத்திரத்துத் தான் ... ௫௬௨
நீதகமேற விக்குவத்தி ரஞ்சவுச மாசமனம்
ஆதியித யத்தா லளித்து ... ௫௬௩
சத்தியோ சாதாதி யைந்தாலர்ச் சித்துமூ
லத்தாலைந் தாகுதி யீந்து ... ௫௬௪
பூருவமு தல்வடக்கந் தம்பிரமன் மாலரன்பொய்
தீரு மனந்தரைச்சாத் தி ... ௫௬௫
ஆதிகிழக் காகத்திக் கெட்டி லமரர்கோன்
ஆதியெண்ம ரானவர்ச்சாத் தி ... ௫௬௬
பிரமனையீ சானத் தருச்சித்துப் பீடார்
திருமா னிருதியிற்சாத் தி ... ௫௬௭
ஓதுந் தழற்சிசுவைக் காத்திடுக வென்றுளதாந்
தீதகல் விண்ணப்பஞ் செய்து ... ௫௬௮
உதாகனநின் னுமஞ் சிவாக்கினியென் றோதிப்
பிதாமாதா வைவிடுத்தே பின் ... ௫௬௯
தற்பரனை முன்போற் றழலிதயத் தர்ச்சிபின்னர்
அற்றமினெய் யெண்ணமுத மால் ... ௫௭௰

புதுமையுறு நைவேத் தியப்போதின் மூலம்
அதனாற் சிலசெய்தோ மம் ... ௫௭௧
மொய்த்தபிர மாங்கத்தி னுக்குமூ லாகுதியிற்
பத்தியொன் றோமம் பணி ... ௫௭௨
நன்குறத்தங் தேபூர ணாகுதிநை வேத்தியத்தின்
றன்பொருட்டோ மஞ்செய் சரு ... ௫௭௩
வௌஷடங் தம்பூர ணாகுதிக்கோ மத்திற்
கவிர்சுவா காந்தமு மாம் ... ௫௭௪
ஆசமனஞ் சந்தனந்தாம் பூலா திகளளித்தே
யேசிலட்ட புட்பஞ்சாத் தி ... ௫௭௫
ஈந்து பராமுகவர்க் கந்தி யிறையிலிங்கத்
தேய்ந்தசிவன் பால்யோசித் தே ... ௫௭௬
அரன்மூ லந்தன்னு லாகுதிசெய் தீக
பிரமாதி கட்குப் பலி ... ௫௭௭
படிக்குமறை யோதுபிர மாதிகளைப் பாங்கா
யொடுக்கு முறையி லொடுக்கு ... ௫௭௮
உன்றனுக்குத் தெற்கிலிரு மண்டலமுண் டாக்கியதின்
முந்தினதிற் பூர்வமுன்னுன் கில் ... ௫௭௯
உருத்திரர்கள் மாதாக்க ளோடு கணங்கள்
உரைத்த வியக்கரை யும் ... ௫௮௰

தள்ளருமீ சாதிநான் கிற்கிரகந் தானவரோ
டொள்ளரக்கர் நாகரையும் ... ருஅக

மண்டல மத்தியிலீ சானதிசை வன்னிதிசை
கண்ட நிருதிதிசைக் குள் ... ருஅஉ

அற்றமில்லின் மீன்களினோ டான விராகிகள்சிர்
உற்றவிசு வங்களையும் ... ருஅங

சிலமார் வாயு வருணநடுக் கேத்திர
பாலனையும் பூசை பணி .... ருஅச

ஆனசுவா காந்தமா கப்பலியு மர்க்கியமு
மூனமற வீந்தனைவர்க் கும் ... ருஅரு

ஏனைய மண்டலத் திந்திர * ஞதியர்தந்
தானமதி லெண்மரையுஞ் சாத்து ... ருஅசு

பிரமனையி சானத்தர்ச் சித்தருச்சி பின்னர்
அரியை நிருதி யதில் ... ருஅஎ

நடுநீல லோகிதரை யர்ச்சித்து நல்கி
யடைவி னெடுமருக்கி யம் ... ருஅஅ

அளித்துருத்தி ராதியர்க்கு முந்திப் பலியை
யளித்தா சமனுர்க்கி யம் ... ருஅசூ

இந்திர ராதியர்கட் கீந்துபலி யாசமனந்
தந்தவதன் பின்புறத்திற் றன் ... ருசூய

---

* ஞதித்தர்தந் பாடபேதம்.

முறைமை யுறவத் திரமுதலீ சானம்
இறுதியர்ச்சித் தர்க்கியமீந் தே ... ௬௱௧
ஆரத் திரமலரா ஞாரச முத்திரையால்
எர்மந் திரமெழுப்பி யே ... ௬௱௨
மூர்த்திமனு வாற்றிவ் விபமுத் திரைமலரான்
மூர்த்தியில்யோ சித்து முடித்து ௬௱௩
குன்றுமூ லத்தாலர்ச் சித்தர்க் கியங்கொடுத்தே
யென்றன் பிழைபொறுப்பா யென்று ... ௬௱௪
செய்திடுக திக்குபந்த னத்தைத் திகழ்ந்திடவே
செய்கவவ குண்டனத்தி னை ... ௬௱௫
ஆய்ந்தகோர முத்திரையீந் தான குருமுதலோர்க்
கீந்து பராமுகார்க்கி யம் ... ௬௱௬
விடுத்தேபின் மேவுசண்ட ஞசன மூர்த்தி
யடுத்தமூ லத்தாற்சாத் தாய்ந்து ... ௬௱௭
எண்டோளன் சாத்து மவைமிசைவ தாதியெலாஞ்
சண்டன்மூ லத்தளித்துத் தான் ... ௬௱௮
உதவுசெபஞ் செய்தளித்தே யுற்ற பிழையா
மிதனைப் பொறுத்தருளென் றே ... ௬௱௯
உதவியர்க்கி யம்மொடுக்கி யுற்ற மூலத்தால்
தஇயகம லத்திலமைத் தே ... ௬௱௰

மருவு மருக்கியத்தின் மன்னிய மாமந்
திரமெழுப்பி வைத்திதயத் தில் ... ௯௰௧

சிவபூசை முற்றிற்று.

செபம்.

ஆறைந்து நான்குமூன் றோர்முகமா மவ்வவினம்
ஏறவெண்பட் டுப்பாசத் தில் ... ௯௰௨
சுதவுதலிற் கண்டி முகமுமுகஞ் சாரச்
செபவடங்கோ புச்சமொன்றச் செய் ... ௯௰௩
புத்திமுத் திக்குப் புதியகண்டி மூவொன்பான்
பத்தியொடை யைந்தாகப் பண் ... ௯௰௪
அக்கோவை மேரு வினையருச்சித் தேபிறர்தஞ்
சக்குநோக் காதொழித்துத் தான் ௯௰௫
விளம்பனைத்தி னுக்குஞ் சதஞ்சதமீ சானம்
விளம்பகோ ரம்மேரு வில் ... ௯௰௬
பற்றற்றான் மேனோக்கிப் பண்ணிடுக மாலையினைப்
பற்றுற்றான் கீழ்நோக்கிப் பண் ... ௯௰௭
உரைசெய் செபத்தைமணி யோசையின்றிச் செய்க
தாளங்கோத் தாற்போலத் தான் ... ௯௰௮

முத்திபிரா ணன்சுடரிற் செல்கான் மனுமொழியிற்
புத்திபிந்து விற்செல்போ து ... ௬௰௯
இரண்டுஞ் சுழுமுனையி டத்தெய்தி லெய்து
மெரிபா யிலங்கு மிது ... ௬௨௰
வலக்கையிற் றர்ச்சனியின் மத்திமையின் மற்றுங்
கலக்கு மனுமி கையில் ... ௬௨௧
சேர்த்துவட மங்குட்டத் தாற்செபிக்க வேமேற்சொல்
வார்த்தைமந்த மானதமா கும் ... ௬௨௨
தனது செவியளவே சார்வது மந்தம்
மனதளவே யாமா னதம் ... ௬௨௩
மானதமா கச்செபிக்கிற் கோடி குணமதிகம்
ஊனமின்மந் தம்முரையி னும் ... ௬௨௪
எண்ணூறு தேசெபிக்கி னில்லைப் பலமிகவும்
எண்ணிச் செபியீசற் கே ... ௬௨௫
செபமறந்தான் செப்பி டிருகுணித மாகச்
செபியுணர்ந்தே நற்குணிதந் தேர்ந்து ... ௬௨௬
இலிங்கத்திற் சொல்பரிகா ரத்திரு லத்தொன்
றலங்கு செபவடத்துக் காம் ... ௬௨௭
செபவடமே ருக்கடக்கிற் செப்பா பிரமச்
செபவடமற் றுனூறு செப்பு ... ௬௨௮

இலிங்கத்திற் சொல்பரி காரமெட்டி லொன்றே
யிலங்குமற்ற மாலைகளுக் கே ... கூஉகூ
அம்பாத்தி யாசமன வர்க்கமறிற் சொல்சதஞ்சா
தம்புருட மீசானத் தை ... கூஙய
உருளி லொடுக்கலறி லர்க்கியமோ ரைக்குநா
றிருநா ருடையிலாயி ரம் ... கூஙக
ஆவாக னாதியி ரைந்துதுவா ரார்ச்சனைசிர்
பாவுபஞ்ச சுத்தி பனன் ... கூஙஉ
சதமுறையே சாற்று பிறழினுட னுன்னில்
அதிலரையா மென்றே யறி ... கூஙங
மூலஞ் சதமுறையே சொன்னிபதிப் பண்டமுட்டிற்
கோனுமட்டின் மஞ்சனங்குன் றில் ... கூஙச
சதமிதபஞ் சாற்றுதயி லாதிமுட்டிற் சாற்றி
டதிலரையா னேந்தாதி யேல் ... கூஙரு
அலராற் றிருக்கிலிங் காதி முடிக்குச்
சொனுசதம்பூச் சாத்திரட்டிக் து ... கூஙசு
எங்கையைப்பூ சித்தபண் டத்தினுரோ மாதியா
னேந்தாட்டி முச்சதங்கூ றன்று ... கூஙஎ
கோழையுறு நீரிலங்கத் திற்படிற்கூ றீரயுதங்
கோழையுறின் மூன்றயுதங் கூறு ... கூஙஅ

சதம்பகர்நூ பாதிதர்ப்ப ஞாதிதப்பி லங்கச்
சதந்தனிற் பாதிமறந் தால் ... கூசகூ
கொங்கமர்நூ பத்திற் குறுகி யிடிஆயிர்கள்
அங்கமுறை யிசா னம் ... கூருய
விழினிலிங்க மாழ்நீர் விளம்பு நியுதம்
எழிஉறத்தா பிக்கவிதி யால் ... கூருக
நியுதமுறை நின்மா லியக்குழிவீழ்ந் தாலீ
ராயுதமிலிங் கங்கடந்தா லாம் ... கூருஉ
ஆதார மின்றிவிழிற் சானுக் கிரண்டயுதம்
ஆதார மேற்சொலயு தம் ... கூருந
தளர்வவிவ்வா றேற்றிச் சாற்று புருடக்
தளவே லிலேப்பரிகா ரம் ... கூருச
உரையா யிரமொருநாட் பூசைமுட்டி லப்பால்
இருநான் முதலாக வே ... கூருரு
ஆயிரத்தி னேடுமுந் நூறு தினங்கூட்டி
யேவுரைமூ வைந்துதின மேல் ... கூருகூ
கோவிபே யிரயுதங் கூறுகவோர் திங்களினில்
நாலயுத மாக நவில் ... கூருஎ
அப்பாலோ ராண்டளவேற் றிங்க டொறுமதிகந்
செப்பேற்றி யிரயுதந் தோர்ந்து ... கூருஅ

ஊக்கமுறு மாண்டிற்கப் பானுமொழி யிற்பூசை
தீக்கையினு லாகுஞ்சுத் தி .... கூருக
எண்ணிறந்து பூசிக்கு முன்புசித் தான்மனம்
பண்ணிப் புனலிற் படிந்து ... கூகூ௰
இருகுணிகம் பூசை யியற்றிப் பிரம
சரியா யுபவசித்துத் தான் ... கூகூக
அயுதமூ லஞ்சொலியா திக்குமற்றை நாட்பொன்
னுபர்பலிசெய் வித்தே யுதவு ... கூகூஉ
அயுதமிலிங் கம்வலைப ராதிதொடிற் சொல்லி
ராயுதங்கா காதிதொடி லாம் ... கூகூங
கரிசுற்ற நாய்க்கடிவா ஞதியர் கண்ணுற்
றரிசிக்கி லைந்தயுதஞ் செப்பு ... கூகூச
தொடின்ஞானி மூன்றயுதஞ் சொல்கவிப மாட்டு
தொடிலந் தணர்நூறு சொல் ... கூகூரு
முச்சாதி யேலிரண்டு மூன்றுசத நான்குசதஞ்
செப்பிப் பலிசிறக்கச் செய் .... கூகூகூ
அழல்சூழப் பட்டிலிங்கங் காந்திகுன்று தாயின்
ஒழியவுரை மூவயுத மோர்ந்து ... கூகூஎ
வெந்திடி னுய்க்கெரிப்பான் றீண்டிலொழி வேறிலிங்கந்
தந்திடக்கொ ளோர்நியுதஞ் சாற்று ... கூகூஅ

இட்டலிங் கங்கள்வ ராதியினு லேகிடிலே
யெட்டுநாட் பட்டினியுற் றே ... கூகூக
உளமதிலர்ச் சித்துப்பா லோங்கு கனியாதி
யிளநீ ரவையருந்தி யே ... கூஎம
ஐம்முக னைச்சிந்தை செய்திருந் தே யவ்விலிங்கம்
எம்முயற்சி யானுந்தேர்ந் தே ... கூஎக
கிருகித் திலிங்கசுத்தி செய்துகீழ் போலத்
திருவாரும் பூசையினைச் செய் ... கூஎஉ
காணுதேல் வேறிலிங்கங் கைக்கொ ளதன்பின்னர்க்
காணி விரண்டுமர்ச்சி கற்பு ... கூஎங
பூசையுப யோகத்திற் றன்மறந்துற் றுற்புகறல்
ஆசை யுடனிருநா ளும் ... கூஎச
பண்ணுதல் செய்பரிகா ரத்தி லிரட்டிகுற்றந்
தன்னிலங்கத் தன்னியன்செய் தால் ... கூஎரு
அயர்ச்சியுற்றே பூசைபர்வ கால மவையில்
இயற்றுன்சொன் மூலநூற் றெட்டு ... கூஎகூ
ஆடிமுதன் மூன்றிற் பவித்திரஞ்சாத் தானியுதக்
தோடோர் நியுத முறை ... கூஎஎ
விரதங் கிரியைநிய மம்விழிற் காயத்
திரிசொலஞ் ஞாறதுவுஞ் செய் ... கூஎஅ

ஆற்று து முட்டினித்தி யாங்கியரன் பூசைக்குச்
சாற்றியது போற்செய் தளர்ந்து .... கூஎகூ
இறையொடுசேர் வன்னிகெடின் முந்நாட் பசியுற்
றறைக பதினா யிரம் ... கூஅ௰
மாயாமற் காத்த வளரங்கி மாய்ந்துவிடில்
ஆயிரங் கூறுபசித் தன்று ... கூஅக
அறைக விரண்டயுதம் புத்தகமா சான்மேல்
அறியாது தம்பதமுற் றூல் ... கூஅஉ
குருலிங்க வேடத்தார் சாயைகடக் கிற்கூ
ஞெருருமையின் முந்நூறோர்ந் து ... கூஅ௩
கோவிளக்கு முந்துங் குலத்தார் நிழல்கடக்கும்
பாவமற நூறு பகர் .... கூஅச
முத்திதன் போதகன் சாதகன்மூன் னிந்தகன்சொல்
பத்தயுதம் பாதிதற்பா தி ... கூஅரு
உரைநியுத நித்தியத்தி னும்பரிகா ரத்துங்
குருவினைத்தா னேவல் கொளின் ... கூஅகூ
அறிந்துகுரு வார்ச்சனைதப் பிற்கூ றயுதம்
அறியாமை யாலா யிரம் ... கூஅஎ
குருவைவெல வெண்ணிலஞ்சூ றுமெதிர்த்துக் கூறில்
உரைசெயலெண் ணாயிரமா கும் ... கூஅஅ

நணுகு மரன்றிரவி யங்கவரி ஞன்கு
குணிதமீந் தேகநியுதங் கூறு ... ௬௯௯

அறிந்தெனி லிங்குணித மீந்தா தரவு
செறிந்தே யிருநியுதஞ் செப்பு ... ௭௱

அருந்தினை வேத்தியமீ சற்கதற்கு நேராய்ப்
புரிந்தீந் தயுதம் புகல் ... ௭௱௧

அரனதுநி வேதிதந்துய்த் தாலரன்றன் பஞ்சப்
பிரமமை யைஞ்ஞூறு பேசு ... ௭௱௨

உரையிருபத் தையா யிரமுயர் சண்டன்
றிரவியஞ்சற் றேனுமருந் தில் ... ௭௱௩

அதனைப் புறம்பிலுய்க்க நின்மா லியமாம்
அதுபுசித்தார் கூறுநியு தம் ... ௭௱௪

காமத் ததனைப் புசிக்கிற் கடும்பாவம்
ஏமமுறுந் தீக்கையிற்சுத் தி ... ௭௱௫

அயுதஞ்சொ னின்மா லியங்கடக்கின் மூழ்கி
யயுத மறைகமிதித் தால் ... ௭௱௬

இலங்கிய லென்றதெய் வத்திரவி யாதி
யலங்கலுறு மஞ்சினையு மாம் ... ௭௱௭

புறம்பிலுய்த்த நின்மா லியங்கொடிலப் போதே
அறைந்திடுத லோரயுத மாம் ... எாஅ
அருந்திடினின் மாலியஞ்சங் காரமா யன்றே
யிரும்பிரம முந்நா றியம்பு ... எாகூ
நல்கிலொரு வர்க்குமறந் தீசனின் மாலியத்தைச்
சொல்க வயுதந் துணிந்து ... எாய

செபம் முற்றிற்று.

போசனம்.

ஆலயத்தின் மேலிச் சிவனையா லால்வி தியாற்
சீலமுடன் சேவையினைச் செய் ... எயக
நன்னுங் கரங்கால் கழுவியே யாசமனம்
பண்ணி நியாதம் பணி ... எயஉ
பூர்வமுனந் தம்வடக்குப் போதக னுதியர்க்காம்
பூர்வதிசை யார்க்கும் பொது ... எயங
உற்றவருட் சாதகனுக் குத்தரமு மாகுமன்றி
மற்றையர்க்குப் பச்சிமமு மான்பு .... எயச

மிக்க தவஞ்சாதி மேன்மை யுளதீக்கை
யொக்கு மவர்க ளுடன் .... எயிரு

ஒருவர்க் கொருவர்தொடா தோர்பங்தி யுற்றே
மருவுதலைக் கட்டில்லா மல் ... எயிசு

முழந்தான் மிசையத்த மூன்றிமோ னத்தோ
டிழிந்தவரை நோக்கா திருந்து .... எயிஎ

முழநீளங் கோமயத்தாற் பூமியிற்றன் முன்னே
மெழுகி யிரேகையிடன் மேல் ... எயிஅ

மறுவிலா சான்முதனுல் வர்க்கு மடைவே
யறிநான்கு மூன்றிரண்டொன் ருய் ... எயிசு

அரசத்தி யாலோ டாமணைக்குத் தான்றி
சுரைதாமரை சேக்கிஞ் சுகம் ... எஉ0

ஓங்குமெருக் குச்சாதி யுற்றவகு ளத்திநொடு
வேங்கையிது வாதி விடு ... எஉக

பதுமங் கதலிபுன்னை பாதிரிவெட் பாலை
மதுகம் பலாசுதும்பி மா ... எஉஉ

ஆகும் பலாவுற் பலஞ்செண் பகங்கடம்பு
பூகமிலை சுத்திசெய்து போடு ... எஉங

ஒருசாதி யாயுங் கதலியிலே யேற்றன்
டுரியா தடிவலத்தா யும் ... எஉச

அந்தமில்பொன் ஞதியுமாஞ் சுத்திசெய்தேழ் காற்கோர
மந்திரிகஞ் சக்கலமு மாம் .... எஉரு

ஆன்றுப் பதனிற் புரோக்கித் ததன்மீதிற்
ருன்றன்னை யொத்தான் ருன் ... எஉசு

பாகம் பணிச்சிவ னுக்கென்று பாத்திரத்தோ
டாகுமனம் பெய்க வதில் ... எஉஎ

கறியுப் பனமினைகள் கையா லிடாமற்
றெறுவியத னுலிடுக தேர்ந்து ... எஉஅ

உந்துமத்தி ரத்தாற் புரோக்கித் தொளிர்வவுஷ
டந்த மிருத்துஞ் சயம் ... எஉசூ

அவமறவேழ் காலபிமந் திரித்துவெவ்வே றன்னஞ்
சிவனுசா னுக்குநிவே தித்து ... எஙய

வலப்பாலிற் கோமயத்தான் மண்டலமிட் டேயத்
தலத்தினிலி டற்பம் பதம் ... எஙக

அறலங்கை யேற்றபினு சாதி யறைந்தே
யுறுகனிட்டை தன்னு லுகுத்து ... எஙஉ

சேடித்த நீர்வளைத்தீ சானத்திற் றற்புருடம்
பாடித்தன் னீரைப் பருகு ... எஙக

பற்றியிடப் பாணிநுகர் பாத்திரத்தை யுண்பதெலா
நற்றமு லாகுதியாய் நாடு ... எஙச

ஓதத் திரத்தா லுதராக் கினிபெழுப்பிக்
கோதில் பிராணுதிக் கும் ... எஙரு

பலியிடுகை யிற்செறிந்த பல்லிற் படாதே
நலமிருக முத்திரையி னுல் ... எஙசா

வெள்ளுளிதேன் கொம்மடிக்காய்சிற்குருவெண் கத்தரிக்காய்
வள்ளி பசளைகோ வை ... எஙஎ

இன்ன பிறவும் விலக்கி யிவையனைத்தும்
இன்னலெனை நீக்கியருந் தி ... எஙஅ

கோகன்ன முத்திரையா னீரருந்தி முன்போல
மேவுமனைக் கப்புறமே வி ... எஙகூ

எண்ணிருகால் வாயுமிழ்ந்து நீரிற் சுசியனைத்தும்
பண்ணியபி ணுசமனம் பண் ... எசய

வலக்கைநீ ரங்குட்டத் தால்வலது பாதாங்
குலிக்கண்பெய் மாசறுகைக் கொண்டு எசக

இருந் து புனிதமுற நீறணிந்து கையாற்
பரிகையெனு முத்திரைபன் பாங்கு ... எசஉ

பாணியுட னங்கநியா தஞ்செய் தகோரமனுப்
பேணுநா றேத்தியதன் பின் ... எசங

மவுனம் விடுத்தடைக்காய் சுக்கொன்ற மாந்திச்
சிவனையுணர் வுட்கண்டு சேர்ந்து ... எசச

தூங்கி விழித்தருணா லோதி யடியரொடும்
ஓங்கிரவி மேல்பா னுறின் ... எசரு

சந்தியுடன் பூசையன றக்கதகச் செய்துவந்
தந்திவண்ணன் கோயி லடைந்து ... எசசூ

ஆருயிர்கட் கெல்லா மருள்புரிந்து காப்பானை
நாருடனே போற்றி நயந்து ... எசஎ

இல்லணுகிப் போகியே லீவ துடற்கிந்து
மெல்லணையி லேறி விரைந்து ... எசஅ

நினைவுமறப் பற்றுயிரு ணீங்காது நின்ற
வினையிலியை மேவியரு ளால் ... எசகூ

இருந்திடுக மெய்யி னிளைப்புணர்ந்து பாயற்
பொருந்தித் துயில்சிறிது போது ... எருய

நித்திய கன்ம நெறியார்க் கிவையோர்ந்த
புத்திமுத்தி யுண்டாம் புகழ் ... எருக

ஆகமங்க ளாய்ந்து கடவூரின் வாழுருமை
யாகுமறை சாற்றிடுநா வான் ... எருஉ

பஞ்சாக் கரமுனிவன் பாடுகென மாநிலத்தோர்
துஞ்சா திடரிற் சுழன்று ... எருங

இதம்பெறவிந் நூலுரைத் தான்றருமைச் சைவ
சிதம்பர நாதமுனி தேர்ந்து ... எருச

ஓதினோர் கற்றோர்க் குறுகிரியை செய்தாரிற்
பாதியதிற் பாதி பலன் ... எருரு

போசனம் முற்றிற்று.

நித்தியகன்மநெறி முற்றிற்று.

ஞானசம்பந்த குரவர் திருவடி வாழ்க.